KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

# கலாநிலயம்

**A Literary Weekly**

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 5.] 1932 ஷு அக்டோபர் மீ 13உ [No. 40

## பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 781
2. நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து, 9-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L., 783
3. தமிழ்ப்பாடம் நளவெண்பா - கலிதொடர்காண்டம் 784
4. கைவை—வைகை N. R. சேஷாசாரி 787
5. பொதிகைநிகண்டு (பண்புபற்றிய பெயர்த் தொகுதி) S. வையாபுரிப் பிள்ளை B.A. B.L. 788
6. அப்பர் (64 கலைகள்—தர்க்கம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 790
7. திருக்குறள் நீதி A. இராமலிங்கம் 792
8. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 5. களம் 1.) ஷேக்ஸ்பியர் நாடகம் 793
9. குடி வாழ்க்கை (Plato's Republic) K. இராஜகோபால் 795
10. வர்த்தமானம் 799

## கலாநிலயம்

### கலைவளர்க்கும் முறை 2.

கலைகளோடு ஏனையோரை உறவுசெய்துவிக்கவேண்டுமென்னும் ஊக்கம் உடையவர், தாமே முதலில் எத்தகையராயிருப்பது இன்றியமையாததென்பதைச் சென்றவாரம் எடுத்து இயம்பினோம். இனி, அன்னோர், மற்றவர்களைக் கலைவளரும் நெஞ்சினர்களாக்குதற்கு எவ்வகையில் முயற்சிகள் செய்யலாம் என்பதைச் சற்றே சுருக்கமாகக் கூறுவோம். நெறியை ஒருவாறு குறிப்பிடலாமேயொழிய ஆற்றவேண்டியவைகளத்தனையும் அறைய இயலாதென்பது வெளிப்படை. ஆதலின் பொதுவாகவே சில விடயங்களைப் பற்றிப் பேசுவோம். மற்று, இவ்வரிய கருமத்தை விரும்பிச் செய்ய முற்படுவோரில், அவரவர் தன்மை இடம் அவரவர்க்கு வாய்க்கவல்ல வசதிகள், அவரால் போதிக்கப்பெறுவதற்கு உரியராய் நிற்போர்தம் தன்மை நிலைமை அனையவைகளுக்கு ஏற்றபடி முறைகளும் அம்முறைகளை நடத்திவைக்கும் வகைகளும் சிறப்பாக மாறி வழங்கப் பெறவேண்டுமென்பது இன்றியமையாததே. இங்கு நாம் இயம்பித்தருவனவன்றி இவ்விடயத்தில் சிறப்பாக இன்னும் ஏதேனும் அறியவேண்டுபவர், எமக்கு விரிவாகவும் தெளிவாகவும் அவர் அறியவேண்டுவதை வரைவாராயின், எம்மாலியன்றவளவு விடைதந்துதவ மகிழ்பவராவோம். பொதுமுறையில் நினைவிற்கொள்ள வேண்டியன இவைகளாம்:—

(1) கலையுணர்வையும் அதனை யடையும் வழியினையும் பற்றிப் பேசுகின்றோமல்லது, தமிழை வளர்ப்பது எங்ஙனம் என்பதை நாம் இச்சமயம் ஆராயவில்லை. இதனை மறவாதிருத்தல் மிகவும் அவசியம். இல்லையேல், தாய்மொழி என்ற வாசா கைங்கரியம் மாத்திரந்தான் எஞ்சும்.

(2) கழகங்கள் சங்கங்கள் ஒன்றும் நிறுவவேண்டா. நிறுவினால் வீண்வழக்கும் கலகமும் காலப்போக்குந்தான் கண்ட பலனாகும். உயரிய நோக்கங்கள் உருக்குலைந்து போவதெல்லாம் பெரும்பாலும் கழகங்களின் காரியமே.

(3) இவ்வுயரிய காரியத்தை மேற்கொள்கின்றவர் தாமே அதனைச் செய்யவேண்டும். கூலிகொடுத்துச் செய்விப்பதென்னும் நினைவு வைக்கவேண்டா.

(4) பொருளுதவி இக்கருமத்திற்கு வேண்டற்பாலதன்று. பொருளின்றி நடைபெறுதற்கியலாததொன்றும் நல்லதன்று. பிறருதவியும் பொருளுதவியும் இன்றியமையாததாம்படி அமைந்த தொன்றும் நீடித்து நிற்காது.

(5) தமிழ்மொழியால் கலையுணர்வு தற்காலம்தெளிவடைந்து நிலைபெறுவதற்கு ஆங்கில இலக்கியப் பயிற்சி செய்தே தீரவேண்டும். தமிழ் மாத்திரம் பயில்வதென்னும் நினைவுபோக்கி ஆங்கிலத்தையும் இணையாகக் கற்கவும் கற்பிக்கவும் துணியாவிட்டால், எண்ணிய பயன் அவ்வளவும் எய்த இயலாது. இவ்விருமொழி இலக்கியங்களும் கலையின் நலத்தினால் அளப்பரிய பெருமையுடன் பொலிகின்றன. கலையின் நுண்மையில் தமிழ்இலக்கியம் ஆங்கில இலக்கியத்தைப் பலபடி விஞ்சுகின்றதென்பதற்கும் ஐயமில்லை. ஆயினும், கலையின் இலக்கணத்தையும் அதற்குரிய மெய்த்திறத்தையும் தற்காலத்தவர் ஆங்கில இலக்கியத்தாலல்லா

மற் கற்க இயலாது. இல்லையேல், மொழிப்பயிற்சியையே கலையின்வளர்ச்சியாமென மயங்கி முடிதலே கடனாகும்.

(6) சிறுவர்களும், பாமரர்களென்று பெயரிட்டு அழைக்கப்படுகின்றவர்களுந்தாம் கற்பிக்கப்படுவதற்குரியவர்களாயிருக்கின்றவர்கள் என்னும் கருத்தையொழித்து, எவ்வயதினரும், எந்நிலையில் எத்தொழிலில் இருப்பவர்களும் கலையுணர்வு பெறும்வகையில், கைக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கின்றனர் என்பதை மறத்தலாகாது.

இங்குக் குறித்த இவை ஆறும் பொதுவாக நினைவிற்கொள்ளவேண்டிய விதிவிலக்குக்கள் ஆகும். இனி இவைகளுக்கு இணங்கச் சிறப்பாக எவ்வகை முயற்சிகளைக் கைக்கொள்ளலாம் என்பதையும் சுருக்கமாக உரைக்கலாம்.

தமிழோடு ஆங்கில இலக்கியங்களின் பயிற்சியும் அயலயல் பெருகவேண்டியது இன்றியமையாததென முன்னர்க் கூறினோம். தமிழிற்கென்றும் ஆங்கிலத்திற்கென்றும் தனித்தனி முயல்வதோடு, இவையிரண்டிற்கும் ஒருங்கே செய்யவேண்டிய முயற்சிகளுஞ் சில உள.

(1) ஆங்கிலத்தில் பி. எ. முதலிய பட்டங்களைப் பெற்றோ பெறாமலோ, அம்மொழி இலக்கியங்களை ஓதி உணர்ந்துகொள்ளவல்லவர்களாயிருக்கின்றவர்களில் எண்ணிறந்தோர் தமிழ் நூற்களைப் படித்துத் தாமே தெரிந்துகொள்வதற்கு வேண்டிய பயிற்சியும் முயற்சியுமின்றி எவ்விடத்தும் இருக்கக் காணலாம். அன்னவர்களில், ஒருவர், இருவர், மூவர், மற்று எவ்வளவு பேரை ஒருங்குசேர்க்கக் கூடுமோ அவ்வளவு பேரை ஒருங்குசேர்த்து, அவர் தொழிலவேளை பொழிய, காலையிலோ, மாலையிலோ, வாரம் இரண்டு அல்லது மூன்று முறை அவர்களுக்குத் தமிழிலக்கியம் போதிக்கத்துவக்கலாம். அப்படித் துவக்கிநடத்துவதற்கு நம் கலாநிலயத்தில் கையாளப்பெறும் தமிழ்ப் பாட முறையானது, இலக்கிய உணர்வும் இலக்கண அறிவும் எய்துவிப்பதற்கு ஏற்றதாகும் என எண்ணுகின்றோம். வேறொருவர் உதவியின்றியே இப்பாடங்களைப் பயின்றதால் இலக்கியச் சுவையும் அறிவும் எய்தப்பெற்ற நண்பர்கள் நம் வாசகர்களுள் பலர் இருக்கின்றனர் என்பதை யாம் அறிவோம். மாணவர்கள் செய்யுள்களை மனப்பாடம் செய்யவேண்டியது இன்றியமையாதது. இவர் தமிழின் சுவையைத் தேரத்தேர, அதன் இலக்கியங்களை மகிழ்ந்து படிக்கத் தலைப்படுவதுடன், பிறகு ஆங்கிலத்திலும், வர்த்தமானப்பத்திரிகைகளையும் ஒன்றற்கும் உதவாத நாவல்களையும் படிப்பதில் தம் காலத்தையும் மனத்தின் வளர்ச்சியையும் கெடுத்துக் கொள்கின்ற வழக்கத்தை மெல்ல மெல்ல விட்டுவிட்டு, ஆங்கில இலக்கியங்களின் உயரிய நூல்களில் தம் கருத்து ஈர்க்கப்பெற்றவர்களாவாரென்பது திண்ணம்.

(2) பாடசாலைகளில் 5-வது பாரம் அல்லது 'ஸ்கூல் பைனல்' வகுப்பு வரையில் படித்து நிறுத்திவிட்டுப் பற்பல தொழில்களில் அமர்ந்தவர்கள் இருக்கலாம். ஆங்கிலத்திலுள்ள சிறந்த இலக்கியங்களைத் தாமே ஓதி உணர்ந்துகொள்ளற்குவேண்டிய மொழிப்பயிற்சி இவர்களுக்குப் போதாது. இத்தகையவர்களுக்குக் கலையுணர்வு சுரக்குமாறு செய்வதற்கு முதலில் ஆங்கிலமொழியையே தக்க கருவியாய்க் கொள்வது நலம். இன்னவர்களிற் சிலரை வாரம் இரண்டு மூன்று முறை ஒருங்குசேர்த்து அவர்களுடைய தகுதிக்குத் தக்கபடி ஏதேனும் ஒரு ஆங்கில இலக்கிய நூலைப் போதிக்க ஆரம்பிக்கலாம். எந்த நூல் ஆரம்பிப்பதற்கு ஏற்றதென்று எல்லாருக்கும் பொருந்தும்படி ஒன்றை இங்குச் சொல்ல இயலாது. கற்கநிற்பவர் தம், வயது, உலக அநுபவமுதிர்ச்சி ஊக்கம் முதலியவைகளைப் பொருந்தியதாம் அது. முதல்தர இலக்கியத்தைச் சேர்ந்ததாயிருக்கவேண்டுமென்பதும், வசனநூலைவிடச் செய்யுள் நூலே ஆரம்பிப்பதற்குத் தக்கது என்பதும் மறக்கற்பாலனவல்ல. இவ்வண்ணம் இரண்டு மூன்று வருடங்கள் சென்றபின், அம்மாணவர் தாமே சில ஆங்கில நூல்களை எடுத்து ஓதிக்கொள்ள விழையவராவர். அதன்பின், முன்னுரைத்த முறைப்படி அவர்களுக்குத் தமிழ்ப் பாடத்தையும் துவக்கலாம்.

(3) தமிழ் நூல்களை ஓதிக்கொள்ளத்தக்க பயிற்சி வாய்ந்தவர்களிற் பலர் ஆங்கிலமே அறியாதவர்களாயிருக்கின்றனர். இத்தகையவர்களுக்கு ஆங்கிலமொழியை முதலிலிருந்தே கற்பிக்கத் துவக்கவேண்டும். நடுவயது அடைந்தவர்களுக்கு ஒரு புதிய மொழியைக் கற்பிக்கத்துவக்கி, அவர் அம்மொழி இலக்கியங்களைப் படிக்கக் கூடியவர்களாகும் வரையில் கொணர்ந்து சேர்க்க எத்தனை காலம் செல்லும் என்று ஏங்கவேண்டா. காலம் நம்கையில் இருப்பதொன்று அன்றாதலின் அதனைப்பற்றிய நினைவு நமக்கு அவசியமில்லை. நாம் செய்யவேண்டியவைகளைச் செய்யத்தகும் முறையில் முயன்றிருக்கவேண்டுமென்பதொன்றே நம்மனோர் கடன். அதன்மேல் சிந்திக்கப்புகுவது சிறு மாநுடரை மருட்டுமொரு அந்தகாரம். ஆங்கிலப் புலவர் ராபர்ட் ப்ரௌனிங்(Robert Browning) என்பவர், leave now for dogs and apes-man has for ever என்று விளம்பிய ஞானமொழிகள் நம் இதயத்தில் ஆழ்ந்திருந்தா லல்லது செயற்கரிய கருமமொன்றையும் கைக்கொள்ளத் துணியமாட்டோம். ஆங்கிலமே அறிந்திராமல் நடுவயது எய்திய ஒருவருக்கு இரண்டு வருடங்களில் அம்மொழியில் போதிய பயிற்சியளிக்க இயலும் என நம்புகின்றோம். அதன்மேல் அவருடைய ஊக்கத்தால் அதனை எவ்வளவு தூரம் வரையிலேனும் வளர்த்துக்கொள்ள இயலும்.

(4) தமிழ்நூல்களும் ஆங்கில மொழியும் அறிந்திராதவர்களும் கைக்கொள்ளத் தகுந்தவர்களே. இன்னோர் எந்நிலையிலேனும் எத்தொழிலிலேனும் இருப்பவர்களாயினும், அவர்தம் வயதுதான் எதுவேயாயினும், தமிழ் ஆங்கிலம் என்னும் இருமொழிகளையும் ஒருங்கே பயில்வதற்குரியவர்களே. விரையாமலும் சலியாமலும் முயல்கின்ற முயற்சி எப்படியும் முற்றுப்பெறும் என்பதிற் சற்றேனும் ஐயமில்லை.

(5) ஆங்கிலம் தமிழ் ஆகிய இவ்விரண்டு இலக்கியங்களிலும் நல்ல பயிற்சியுடையவர் சிலர் ஆங்காங்கு இரண்டொருவர் இருக்கலாம். இன்னவர்கள் வடமொழியையும் பயில முயல்வது மிகவும் நலமாம். அவ்வாறே, வடமொழியும் ஆங்கிலமும் அறிந்தவர் தமிழையும்,வடமொழியையும் தமிழையும் அறிந்தவர் ஆங்கிலத்தையும் கற்றுக்கொள்வது,இன்பம் நன்மை மற்றவர்க்கு உதவிபுரியும் திறமை முதலியவைகளுக்கு நிலைத்ததோர் ஆதாரமாகும்.

முதலிற் சொல்லியதையே மீண்டுமோர்முறை கூறி முடிக்கவேண்டும். இவ்வளவும் நாம் வற்புறுத்துவது, மொழியை வளர்ப்பதென்னும் ஓர் அபிமானத்தினாலன்று. எல்லாராலும் இன்று "முன்னேற்றம் முன்னேற்றம்" என்று கழறப்பெறும் ஒன்றற்கும் கருவியாவதற்கு அன்று. வருவாய்க்கு வழிதேடுவதற்கன்று. வர்த்தமானப் பத்திரிகைகளை படிப்பதற்கோ அல்லது கட்டுரை எழுதுவதற்கோ வல்லவராதற்கன்று—வேறொன்றற்குமன்று. மனிதர் நாகரிகமடைந்து நல்லவராவதற்குஇதுவன்றி வேறோர் தக்கமுறை இருப்பதாக யாம் அறிகிலேம். பெயக்கண் நஞ்சுண்டு அமைவதற்கே இவ்வளவும் முயலவேண்டுமென்கின்றோம்.

இம்மொழிகளை உட்கொண்ட நம் நண்பர்களில் எவரேனும் தமது ஊரில் இத்தகைய முயற்சிகளைச் செய்ய விழைவாராயின் அதனை அறிய மிகவும் மகிழ்ந்தவர்கள் ஆவோம். இது பற்றித்தாம் இன்னும் தெரிந்து கொள்ள விழைபவர் எமக்கு எழுதிக் கேட்கலாம். அல்லது, அவர் சென்னைக்கு வரநேருங்கால் எம்மைச் சந்திப்பாராயின் அது எமக்கு மிக்க உவகையை அளிக்கும்.

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

[767-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பத்து, 9ம்- தசகம்.

6-ம் பாசுரம்.

வம்மின் புலவீர்நும் மெய்வருத்திக்
கைசெய் துய்மினோ
விம்மன் னுலகில் செல்வரிப்
போதில்லை நோக்கினோம்
நும்மின் கவிகொண் டிட்ட
தெய்வ மேத்தினாற்
செம்மின் சுடர்முடி யென்றிரு
மாலுக்குச் சேருமே.

உரை:—வாருங்கோள் புலவீர்களே, உங்களுடைய சரீரத்தைப் பிரயாஸைப்படுத்திக் கைகளாலே கிருஷி முதலான வியாபாரங்களைப் பண்ணி ஜீவநத்தைச்செய்யுங்கோள். இந்த ஸ்திரமான லோகத்தில் தற்காலம் செல்வர்கள் இல்லை. உங்களுக்காகவே, உலக வியாபாரத்தில் சிறிதும் பிரவர்த்தியில்லாத நாம் உகைத்தை இப்போது எங்கும் ஊன்றிக் கவனித்தோம். இதுநிற்க, உங்கள் இனிய கவிகளைக்கொண்டு உங்களுடைய இஷ்டதேவதைகளைத் துதிசெய்தாலோ வென்னில் அவைகளெல்லாம், செவ்வைபாக மின்னுகின்ற கிரீடதாரியான என் திருமாலுக்கே ஸ்துதியாய்ச் சேரும். ஏனெனில், இவ்விட்ட தெய்வங்களையெலாம் உள்புகுந்து நடத்தும் பெருந்தெய்வம் அவனே ஆகின்றான்:—

குறிப்பு:—மன்னுலகில் - உலகமெல்லாம் அழியக்கூடிய தென்று சொல்கின்ற இவர் அதை ஸ்திரமான உலகமாகப் பேசலாமோவென—இவ்வுலகத்திலுள்ள பிரபுக்கள் இன்றிருப்பார் நாளைக்கு இல்லையெனினும், இருந்து கழிந்தவர் இடத்துக்கு மற்றுமொருவர் வருவதால் உலகஇயற்கை நடந்துவருகின்ற காரணத்தைப் பற்றி ஸ்திரமாகக் கூறியபடி.

———

7-ம் பாசுரம்.

சேரும் கொடைபுகழ் எல்லையி லானை யோராயிரம்
பேரு முடைய பிரானை யல்லால் யான்கிலேன் [று
மாரி யனைய கைமால் வரையொக்கும் திண்டோளென்
பாரிலோர் பற்றைபைப் பச்சைப் பசும்பொய்கள்
[பேசவே

பதக்குறிப்புக்கள்:—சேரும் - கொடைக்குச் சேர்க்கையான புகழ்களுக்குத் தக்கபடி ஏற்றதானநற்குணம் இவைகளுடைய, கொடை புகழ் - தானமென்ன புகழ் என்ன இவற்றில், எல்லையிலானை - அளவில்லாதவனை, ஓராயிரம் பேருடைய—"ஸஹஸ்ர நாமநே" என்றபடி அஸாதாரணதிருநாமங்கள் ஆயிரம்உடைய, பிரானையல்லால் யான்கிலேன் - பிரபுவல்லாமல் எனக்குக் கிடையாது. பாரில் - பூமியில், ஓர் பற்றைபை - ஒரு சின்ன செடிபோன்ற அல்பனானவனைப் பிரபுவாக நினைத்து, கை - அவன் கைகள், மாரியனைய - மேகம்போல் வரையறையில்லாமல் கொடுக்கும் என்றும், திண்தோள் - வலிய தோள்கள், மால்வரை ஒக்கும் - பெரிய மலைபோன்றுள்ளதென்றும், பச்சைப் பசும் பொய்கள்-இப்படிப் பார்த்தவளவிலே காணக்கூடிய பொய்களை, பேச - சொல்லுகைக்கு, யான்கிலேன் - நான் வல்லேன் அல்லேன், என்று மீண்டும் கூட்டி அந்வயிக்கவும்.

குறிப்பு:—பரபோதேசத்தை விட்டு, இங்கு ஆழ்வார் தாம் துரும்புபோன்ற மனிதர்களைத் துதிக்க வல்லாரல்லரென்று சுவயலாபத்தைப் பேசுகின்றார்.

———

8-ம் பாசுரம்.

வேயின் மலிபுரை தோளி
பின்னைக்கு மணாளனை
யாய பெரும்புக ழெல்லையில்
லாதன பாடிப்போய்க்
காயம் கழித்தவன் றாளிணைக்
கீழ்ப்புகுங் காதலன்
மாய மனிசரை யென்சொல்ல
வல்லேனென் வாய்கொண்டே

பதவுரை:—காயம் கழித்து - பிருகிருத தேஹத்தை விட்டு, அவன் தாளிணைக்கீழ்- பகவானது திருவடிகளின் கீழ், புகும் காதலன்-அமர்ந்து வைகுண்டத்தில் கைங்கரியம் செய்யவேண்டுமென்ற ஆசையுள்ள நான், வேயின்மலிபுரை - மூங்கில் போன்ற, தோளிபின்னை - தோள்களையுடைய நல்பின்னை பிராட்டிக்கு, மணாளனை - நாயகனை, ஆய பெரும்புகழ் எல்லையில்லாதன - பொருந்திய எல்லையிலாத புகழ்களை, பாடிப் போய் - பாடிவிட்டுப் பிறகு சென்று, மாய மனிசரை - மாயையால் மூடப்பட்டிருக்கும் மனுஷியரை, என் வாய்கொண்டு-என்னுடைய நாக்கால், என் சொல்ல வல்லேன் - ஒன்றும் சொல்ல இயலாதவனாயிருக்கின்றேன்-ஒரு பொழுதும் ஒன்றும் துதிரூபமாகச் சொல்லமாட்டேன்.

———

9-ம் பாசுரம்.

வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியே னல்லேனாய்க்கொண்ட சீர்வள்ள லாழிப் பிரானெனக் கேயுளன்
சாய்கொண்ட விம்மையுஞ்சாதித்துவானவர்நாட்டையு
நீகண்டு கொள்ளென்று வீடுந்தரும் நின்றுநின்றே.

பொழிப்புரை:—"மனுஷியரைக் கவி பாடுகைக்கு ஈடில்லாத பிருகிருதியாய்ப் பிறக்கப் பெற்றேன். ஸமஸ்த கல்யாண குணங்களில் சமுத்திரமான சங்கு சக்கராயுத தரனுபிருந்த எம்பெருமான்தன் பரம தயையாலே என்னுடைய கவிகளுக்குத் தன்னை விஷயமாகத் தந்தருளப் பெற்றேன். இன்னுமிப்படி இந்த உலகத்திலே தன்னை அநுபவிக்க வெனக்குத் தந்தருளிப் பின்னை ஸர்வகாலத்திலும்திருநாட்டையும் கைக்கொளென்று காட்டி அந்தத் திருநாட்டையும் எனக்குத் தந்தருளுமென்கிறார்"—ஆறாயிரப்படி.

குறிப்புக்கள்:—சாய்கொண்ட-ஜ்வலித்து விளங்குகிற, வானவர் நாடு - வைகுண்டம் என்று கூறாமல் வானவர் நாடு - நித்தியசூரி அமரர்கள் நாடு என்று சொல்வதற்கு அர்த்தம்-பகவான்தன் நாடு வானவர்க்கே உளது. அதில் தாம் நித்தியவாஸம் செய்வதும் இவ் வானவர் இட்ட வழக்காய் அடைவதென்றும் காட்ட இம்மையும் சாதித்து வர்த்தமான தேஹத்திலேயே போகங்களையும் தந்து தன்னைப்பாடி அநுபவிக்கும் இன்பரஸத்தையும் பிரஸாதமாகக்கொடுத்து

கண்டுகொள் - இம்மையிலேயே மோக்ஷாநுஸுகத்தை அநுபவியென்று கிருபையால் சுட்டிக் காட்டி, நின்று நின்று - பகவான் தனது கருணையால் மோக்ஷ ரஸம்வரையில் படிப்படியாய்க் காட்டிக்கொடுக்கின்றானென்று திருவுள்ளம்.

---

10-ம் பாசுரம்.

நின்றுநின்று பலநா ளுய்க்கு
மிவ்வுடல் நீங்கிப்போய்ச்
சென்றுசென் றாகிலும் கண்டுசென்மங்
கழிப்பா னெண்ணி
யொன்றியொன்றி யுலகம்படைத்
தான்கவி யாயினேற்
கென்று மென்று மினிமற்
றொருகவி யேற்குமே.

பொழிப்புரை:—எத்தனை காலம் விளம்பித்தாவது ஒருக்கால் நம்மையறிந்து அணுகமாட்டானா வென்று நின்றுநின்று பலநாள் இச்சம்ஸாரத்திலே இவ்வாத்மாக்களைப் பிரவேசிப்பிக்கும் இவ்வுடலத்தை நீக்கிப் போய் இவ்வாத்மாக்களுக்கு ஸம்ஸாரத்தைக் கழிக்க வேண்டுமென்றுஎண்ணி அந்தக் கருத்து நிறைவேறுதற்காகவே ஜாக்கிரதையாய் ஒவ்வொரு அவசரத்திலும் ஜகத்சிருஷ்டியைப் பண்ணியருளின பரம காருணிகனை சிருஷ்டாவினுடைய கவியான எனக்கு மற்றொருவரைக் கவிபாடுகை ஏற்குமோ, ஏலாது.

பதக் குறிப்புக்கள்:—பலநாள் நின்று நின்று-வெகு காலங் காத்துக்காத்து, ஜந்ம ஜந்மங்களாய். சென்று சென்றாகிலும்-எத்தனைகாலம் கழிவுண்டபிறகாவது, ஒன்றிஒன்றி - ஜாக்கிரதையான அவதானத்துடன், ஏற்குமே - உசிதமன்று.

---

11-ம் பாசுரம்.

ஏற்கும் பெரும்புகழ் வானவ ரீசன் கண்ணன்றனக்
கேற்கும்பெரும்புகழ்வண்குருகூர்ச்சடகோபன்சொல்
ஏற்கும் பெரும்புக ழாயிரத்து ளிவையு மோர்பத்
தேற்கும் பெரும்புகழ் சொல்ல வல்லார்க்கில்லை சன்மமே

உரை:—அவன் தனக்கே ஏற்கும் கல்யாண குணங்களை யுடையவனான வானவரீசன் கண்ணனுக்கேற்கும்பெரும்புகழான வண்குருகூர்ச் சடகோபன் சொல்களான தன்மைக்குப் பொருந்த அர்த்த புஷ்டி மதுரம் முதலிய குணங்களையுடைய ஆயிரத்துக்கு ஏற்கும் பெரும்புகழ் பாடிய இப்பத்தைச் சொல்லுகிறவர்களுக்கு மறுஜந்ம மில்லை.

---

# தமிழ்ப் பாடம் 40.

## நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[765-வது பக்கத் தொடர்ச்சி]

புன்கண்கூர் யாமத்துப் பூழிமேற் றான்படுத்துத்
தன்கண் டுயில்வாளைத் தான்கண்டும்—என்கண்
பொடியாதா துள்ளாவி போகாதா னெஞ்சம்
வெடியாதா லென்றான் விழுந்து. 95.

பதப்பிரிவு:—புன்கண் கூர் யாமத்து பூழிமேல் தான் படுத்து தன் கண் துயில்வாளைத் தான் கண்டும் என் கண் பொடியாதுஆல் உள் ஆவி போகாதுஆல் நெஞ்சம் வெடியாதுஆல் என்றான் விழுந்து.

பதவுரை.

"புன்கண் - துன்பம்
கூர் - மிகுந்த
யாமத்து - இந்த நடு இராத்திரியில்
பூழிமேல் - புழுதிமேல்
தான் - அவள்
படுத்து - படுத்து
தன் - தன்னுடைய
கண் - கண்கள்
துயில்வாளைத்தான் - தூங்குகின்றவளைத்தான்
கண்டும் - பார்த்தும்
என் - என்னுடைய
கண் - கண்கள்
பொடியாது - உதிராதிருக்கின்றன,
உள் - உள்ளிருக்கின்ற
ஆவி - என் உயிர்
போகாது - போகாமல் இருக்கின்றது,
நெஞ்சம் - என் மனம்
வெடியாது - வெடிக்காமல் இருக்கின்றது,
என்று - என்று (தன் வன்மையை நொந்தவனாய்)
விழுந்தான் - நளன் விழுந்தான்.

விரிவுரை:—தன்னால் தமயந்திக்கு வந்த இந் நிலையைக் காணச் சகியாமல் நளன் தன்னையே பழித்துக் கொள்கின்றான். விதியால் வந்தது இதுவென்று உள்ளந் தேறினாலும் அவ்விதிக்குக் கருவியாய் அமைந்தவன் தானே என்னும் நினைவு புகுந்து இடை இடையே மனதை வருத்தும். துயின்றிருந்த தமயந்தியை நோக்கி நளன் இரங்கியது இது. இனி, இவன் சற்றுக் கண்ணயரத் தமயந்தி துயில்கலைந்து புலம்புவதை அடுத்த செய்யுள் கூறுகின்றது. ஆல், மூன்றும் அசை.

---

முன்றிறனின் மேற்படுக்க முன்றானையுமின்றி
இன்று துயில விறைவனுக்கே—என்றனது
கைபுகுந்த தென்னுடைய கால்புகுந்த தென்றழு
மைபுகுந்த கண்ணீர் வர. [தாள் 96.

பதவுரை.

"இன்று - இந்த இரவில்
முன்றில்தனின்மேல் - இம் மண்டபத்தின் முற்றத்தின்மேல்
படுக்க - படுப்பதற்கு
இறைவனுக்கு-என் தலைவனாகிய நளனுக்கு
முன்தானையும்-(எனது) ஆடையின்தலைப்பும்
இன்றி - இல்லாமல்
துயில - அவன் நித்திரைசெய்ய
என்தனது - என்னுடைய
கை - கை
புகுந்தது-அணையாக அமைந்த இந்த வறுமை,
என்னுடைய - என்னுடைய
கால் - கால்கள்
புகுந்தது - அவனுக்கு மணையாளாய் வந்து
புகுந்த தீமையால் நேர்ந்ததேயாகும்"

என்று - என்று
மை - அஞ்சனம்
புகுந்த - தீட்டிய
கண் - கண்களிலிருந்து
நீர் - நீர்
வர - வரும்படி
அழுதாள் - தமயந்தி அழுதாள்.

விரிவுரை:—துர்ப்பாக்கிய முடையவளாகிய தான் வந்து நளராசனது அரண்மனையில் கால்வைத்த தீமையால் அவனுக்கு இந்தத் துன்பங்களெல்லாம் வந்தனவென்று தமயந்தி தன்னையே நொந்து அழுகின்றாள். உத்தமபத்தினி இவள் ஆதலால், "மதிகெட்டுப்போகவே இம்மாயச் சூதாடி இந் நிலைக்குவந்த பாவியை மணந்ததால் எனக்கும் இக்கஷ்டங்கள் நேரலாயின" என்பதுபோன்ற வார்த்தை ஒன்று சொன்னதில்லை. மனத்திலுமே இப்படிப்பட்ட நினைவு இவளுக்குத் தோன்றியு மிருக்காது.

"என்தனது கைபுகுந்தது என்னுடைய கால் புகுந்தது" என்ற வாக்கியம், "என்னுடைய கால் அந்நாள் இவனது வளமனைக்குள் புகுந்ததால், இன்று புழுதி நிறைந்த இம்மண்டபத்தின் மேல்படுக்க முன்தானை கூட இல்லாமல் என் கையையே அவனுக்குத் தலையணையாய்க் கொடுக்க நேரலாயிற்று" என்னும் கருத்துடையது.

குறிப்பு:—இல்முன், என்று இருக்கவேண்டியது முன்இல் முன்றில் என்று மாறி வருவது வழக்கு. வழக்கு என்பது, சொற்களானவை, பொருள்தந்து நடக்கின்றமுறை. இச் சொல்நடைமுறை அல்லது வழக்கு என்பதை இலக்கணத்தில் இரு பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றனர். இப் பிரிவுகள் இயல்புவழக்கு என்றும் தகுதி வழக்கு என்றும் பெயர் பெறும்.

I. ஒரு பொருளைக் குறிப்பதற்கு ஒருசொல் இயற்கையாய் அமைந்திருக்க அச் சொல்லால் அப்பொருளைக் குறிப்பது இயல்பு வழக்காகும். அதாவது, சொற்கள் இயற்கை நெறியில் நடப்பது இயல்பு வழக்கு. அவ் வியற்கைநெறி அல்லது இயல்புவழக்கு என்பது மூன்று வகைப்படும். அவைதாம், இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ, என்பனவாம்.

(1) இலக்கணமுடைய இயல்புவழக்கு:—சொற்கள் இலக்கணப்படி வழங்குவதாம். நாய் மரம் புலி நெருப்பு என்பனபோல் சாதாரணமாய் வழங்கிவருகின்ற சொற்களெல்லாம் இலக்கணமுடைய வழக்கைச் சேர்ந்தனவாம்.

(2) இலக்கணப்போலி இயல்பு வழக்கு:—இது இலக்கணமில்லாத வழக்கு. ஆனால் தொன்றுதொட்டு இச்சொல் வழங்கிவருவதை நோக்குங்கால் இலக்கணத்தைத்தழுவியேஇருப்பதுபோல்தோன்றும். இலக்கணமில்லாதது இலக்கணம் இருப்பதுபோல்தோன்றுவதால் இது போலியாயிற்று. போலஇருப்பது, போலி. வீட்டின் முன்பாகத்தைக் குறிப்பதற்கு வரவேண்டிய சொற்கள், இல் முன். ஆனால் இது ஏனோ முன் பின்னாகமாறி முன்றில் என்று தொன்றுதொட்டு வழங்கப் பெறுகின்றது. அப்படியே வஸ்திரத்தின் முன் பாகத்தைத் 'தானைமுன்' (தானை - வஸ்திரம்,) என்பதற்குப் பதிலாக முன்தானை என வழங்குகின்றனர். இவைகள் இலக்கணப் போலிக்கு உதாரணங்கள். இவ்விதம் முன்பின்னாக மாறி வழங்குகின்ற வழக்கு இன்றைக்கு நேற்று ஏற்பட்டதன்று பாஷை பிறந்த காலத்திலேயே உடன் தோன்றியதாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அது இயல்புவழக்காய் இலக்கணப்போலியாகும். இந்த இலக்கணப்போலி வேறு, முன் 331-வது பக்கத்தில் காட்டியிருக்கின்றபடி, ஐந்து-அஞ்சு நாயிறு - ஞாயிறு என்பனபோல் வருகின்ற போலி வேறு. அது எழுத்துப் போலி.

(3) மரூஉ இயல்புவழக்கு:—இலக்கணமுடையது, உண்மையாக இலக்கணத்தோடு சேர்ந்து வரும் வழக்காகும். இலக்கணப்போலி, அநாதியாய் இருப்பதால் இலக்கணத்தைச் சார்ந்திருப்பதுபோல் தோன்றும் வழக்கு மரூஉ, என்பது சொற்கள் இலக்கணம்சிதைந்து வழங்கும் வழக்கு. இலக்கணப் போலியைப்போல் இது தொன்றுதொட்டு வழங்கப்பெறாமல் இடைக்காலத்திலே இலக்கணம் சிதைந்து வேறுபட மருவி வருதலால் இதற்கு மரூஉ என்று பெயராயிற்று. அருமருந்து அன்ன பிள்ளை, என்பதற்குப் பதிலாய் அருமந்த பிள்ளை என வழங்குகின்றனர். என் தந்தை என்பதற்குப் பதிலாய் எந்தை என வழங்குகின்றனர். இவை மரூஉ வழக்கிற்கு உதாரணங்கள்.

II. முன்சொன்ன அம் மூன்றுவகை வழக்குக்களிலும், ஒரு சொல்லிற்கு எந்தப்பொருள் உரியதோ அப்பொருளை அச்சொல் இயல்பாய்க் குறிப்பதால் இலக்கணமுடையதும், இலக்கணப்போலியும், மரூஉம் இயல்பு வழக்குஎனப் பெயர்பெற்றன. ஆனால் இடமும் சமயமும் நோக்கி ஒரு பொருளை அதற்கு இயற்கையாய் அமைந்த சொல்லால் குறிக்காமல் வேறுவிதமாய்க் குறிக்கவேண்டி நேரிடலாம். அப்படி நேரிட்டு வழங்கும்போது அது தகுதி வழக்கு எனப்படும். இந்த விஷயத்தை இப்பொழுது இப்படிக் குறிப்பதுதான் தகுதி என்ற கருத்தால் வழங்குவதால் இதற்குத்தகுதி வழக்கு என்னும் பெயர் வந்தது. தகுதி வழக்கும், இடக்கரடக்கல் மங்கலம் குழூஉக்குறி என மூன்று வகைப்படும்.

(1) இடக்கரடக்கல் தகுதி வழக்கு:-இடக்கர் என்பது பலரெதிர் பேசத்தகாதது. ஆதலால் அடைக்கிச் சொல்வதே தகுதி. 'கால் கழுவி வந்தான்' என்பதுபோல், சொல்லத் தகாததை மறைத்து வேறு விதமாய்க் கூறுகின்ற வழக்கம் யாவரும் அறிவர்.

(2) மங்கலத் தகுதிவழக்கு:—செத்தான், சுடுகாடு என்பன போன்ற அமங்கலமானவைகளைச் சொல்லக் கூசி, தூங்கினான் என்றும் நன்காடு என்றும் கூறுவது மங்கல வழக்காகும். செவ்வாய்க் கிழமையை மங்கல வாரம் என்பதும் இவ்வழக்கு.

குழூஉக்குறித் தகுதிவழக்கு:—ஒரு கூட்டத்தார் அல்லது தொழிலாளர் ஒரு விஷயத்தைத் தாமே அறிந்துகொள்ளும்படி இரகசியமாய் மறைத்துப் பேசுவது தட்டார் பொன்னை, பறி என்பர். வேடர் கள்ளைச் சொல்விளம்பி என்பர். இன்னவை குழூஉக்குறிகள். சிறைச்சாலையிலிருக்கும் கள்வனை அவன் இனத்தார் 'மாமனார் வீட்டிற்குப் போயிருக்கின்றான்' என்பதும் ஒருவாறு குழூஉக் குறியாகும்.

- வழக்கு
  - இயல்பு வழக்கு
    - இலக்கணமுடையது
    - இலக்கணப்போலி
    - மரூஉ
  - தகுதி வழக்கு
    - இடக்கரடக்கல்
    - மங்கலம்
    - குழூஉக்குறி

---

வீமன் றிருமடந்தை விண்ணவரும் பெற்றிலாத்
தாம மெனக்களித்த தையலாள்—யாமத்துப்
பாரே யணையாப் படைக்கண் டுயின்றாண்மற்
றாரே துயரடையா ராங்கு. 97.

மெய்ம்மலர்ப்பூங் கோதைப் பிரியப் பிரியாத [மை
செம்மை யுடைமனத்தான் செங்கோலன்—பொய்ம்
விலக்கினா னெஞ்சத்தை வேறுக்கி நின்று
கலக்கினான் வஞ்சக் கலி. 98.

வஞ்சக் கலிவலியான் மாகத் தராவளைக்கும்
செஞ்சுடரின் வந்த கருஞ்சுடர்போல்—விஞ்ச
மதித்ததோர் தானை வயவேந்த னெஞ்சத
துதித்ததே வேறோ ருணர்வு. 99.

தேவர்களெல்லாரும் இருக்க அவர்களை மதியாமல் தனக்கே மாலையளித்த வீமராஜனது புத்திரி தமயந்தி தரையில் துயில்வதைக்கண்டு மிக வருந்தியிருந்த நளனது மனத்திற் கலிபுகுந்து கலக்கவே அவனுக்கு இப்பொழுது ஓர் எண்ணம் உண்டாயிற்று. அவ்வெண்ணம் இன்னதென்பதைப் பின்செய்யுள் கூறுகின்றது.

---

காரிகைதன் வெந்துயரங் காணும னீத்தந்தக்
கூரிருளிற் போவான் குறித்தெழுந்து—நேரே
இருவர்க்கு மோருயிர்போ லெய்தியதோ ராடை
அரிதற் கவனினைந்தா னாங்கு.

பதப்பிரிவு:—காரிகைதன் வெம் துயரம் காணாமல் நீத்து அந்த கூர் இருளில் போவான் குறித்து எழுந்து நேரே இருவர்க்கும் ஓர் உயிர்போல் எய்தியது ஓர் ஆடை அரிதற்கு அவன் நினைந்தான் ஆங்கு.

அன்வயம்:—காரிகைதன் வெம்துயரம் காணாமல் நீத்து அந்தக் கூர் இருளில் போவான் குறித்து எழுந்து, ஆங்கு அவன், நேரே இருவர்க்கும் ஓர் உயிர்போல் எய்தியது ஓர் ஆடை அரிதற்கு நினைந்தான்.

பதவுரை.

காரிகைதன் - தமயந்தியினுடைய
வெம் - கொடிய
துயரம் - வருத்தத்தை
காணாமல் - பார்க்காதபடி
நீத்து - அவளைவிட்டு
அந்த - அந்த
கூர் - மிகுந்த
இருளில் - இருட்டில்
போவான் - போய்விடுவதற்கு
அவன் - நளன்
எழுந்து - எழுந்து
ஆங்கு - உடனே
நேரே - நேராக
இருவர்க்கும் - தனக்கும் தமயந்திக்கும்
ஓர் - ஒரு
உயிர்போல் - உயிரைப்போல
எய்தியது - அமைந்திருந்ததாகிய
ஓர் - அவ்வொரு
ஆடை - ஆடையை
அரிதற்கு - வெட்டுவதற்கு
நினைந்தான் - எண்ணினான்.

விரிவுரை:-தமயந்தி படுகின்ற துயரத்தைக் காணச் சகியாமல் அவளைவிட்டுப் போய்விடுதலே தக்கதென்று நளன் நினைத்தான். கொடிய கானகத்தில் நடுஇராத்திரியில் அவளைத் தனியாகவிட்டுப்போக இவன் துணிந்ததும் கலி செய்த சூழ்ச்சியே. ஆனால் இவன் இது செய்தது அவள்பால் அன்பு இல்லாததாலன்று. இச்செய்கை அவனது அன்பின் மிகுதியையே காட்டும். காடும் மலையுங் கடந்து தன்னோடு அலையாமல் பிறந்தகம் போயிருக்க நளன் எவ்வளவு சொல்லியும் அவள் கேட்கவில்லை. ஆதலால், இவளைத் தனியே விட்டகன்றால் எப்படியும் தனது தந்தைபாற் போய்ச் சேர்வாள், என்னும் எண்ணத்தால் இவன் இது செய்யத் துணிந்தானேயன்றி வேறன்று.

'காரிகைதன் துயர்காணாமல்' என்பதற்கு இருவித பொருள்கள் பொருந்தும். தன் என்பதைக் காரிகை என்னும் சொல்லுடன் சேர்த்துக்கொண்டால், தமயந்தியினுடைய துயரத்தை நளன் காணாதபடி அவளை நீத்து அகல நினைத்தான், என்னும் பொருளைப் பெறலாம். இனி 'காரிகை தன்துயர் காணாமல், எனத் 'தன்' என்பதைப் பிரித்துவிட்டால், "காரிகையாகிய தமயந்தி, தன்னுடைய (நளனுடைய) துயரத்தைக் காணாதபடி அவளை நீத்தகல நினைத்தான்" என்னும் மறுபொருள் கிடைக்கும். தன்பொருட்டு ஒன்றும் வருந்தாமல் தமயந்தி,நளன் படுகின்ற துயரைக் காணக்காண மேன்மேலும், வருந்துகின்றாளாதலால், நளன் தன்னுடைய துயரை அவள் காணாதபடி விலகுவதும் அவளுக்குரிய வருத்தத்தைக் குறைப்பதே யாகும். இந்தப்பொருள் கொள்வதால் தமயந்தியின் குணப் பெருமையை அறிந்து நளன் பாராட்டிய நயம் சிறக்கும்.

குறிப்பு:—(1) காரிகை, என்ற சொல்லிற்கு அழகு என்பது அர்த்தம். அழகு என்பது ஒரு குணம், அல்லது பண்பு. அந்தப் பண்பின் பெயராகிய காரிகை என்னுஞ் சொல் இங்கு அந்தப் பண்பைக் குறிக்காமல் அப்பண்பை உடைய ஒரு பெண்ணைக் குறிப்பதால் இங்கு அது பண்பாகு பெயர் (46-வது பக்கம்) மாது, தையல், என்னுஞ் சொற்களுக்கும் 'அழகு' என்பது தான் அர்த்தம். ஆகையால் அவைகளும் பெண்கள் என்னும் பொருளில் வழங்கும்போது பண்பாகு பெயர்களே.

(2) துயரம் காணாமல், ஆடை அரிதற்கு, என்னுமிவ் விரண்டு தொடர்களும் இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்கள்.

(3) போவான், என்பது, முன்வந்த பருகுவான் பெய்வான் என்பனபோல், வினையெச்சம்.

# கைகவை - வைகை.

[773-வது பக்கத் தொடர்ச்சி]

பிறகு மீனலோசனி போர்க்கோலங் கொண்டு, இரத கஜதுரக பதாதிகளுடன், சிம்மநாதஞ் செய்து, வீராவேசங்கொண்டு திக்குவிஜபத்திற்குப் புறப்பட்டாள். பல நாட்டு மன்னவர்களைப் பாங்காய் ஜெயித்தாள். கைலையங்கிரிக் காவலனான பரமசிவனையும் ஜெயிக்கவேண்டுமென்று ஆர்வங்கொண்டு கைலையங்கிரியைநெருங்கிஇவள் முற்றுகைஇட்டாள்.பரமசிவனது சேனைத்தலைவனான நந்திகேச்வரனை எதிர்த்துக் கடும்போர் புரிந்தாள்.நந்தியும் நடுங்கி யொடுங்கினான். கைலாஸபதியும் மனங்கலங்கினார். தானே நேரில் யுத்தத்திற்கு எழுந்தருளினார். மீனலோசனியின் அதிரூபலாவண்ணியத்தையும், புஜபல பராக்கிரமத்தையும், வீரதீரத்தையும், அவள் செய்யும் அகோர யுத்தத்தையும் கண்டுவியந்து,“ஏ பெண்ணரசி! அழகுக்கேற்ற உருவமும்,உருவத்துக்கேற்றஉற்சாகமுங்கொண்டஉன்றன் ஆற்றலைக் கண்டு மெச்சினோம். எம்மை வெல்லுவது எளிதன்று.நாம் சொல்வதைக் கேள். நீ இப்பொழுதே நின் மதுரையம்பதிகுத் திரும்பிப்போ. இன்னும் ஐந்தாறு தினங்களுக்குள் நாம் அத்திருநகருக்கு வந்து உன்னை மணப்போம்” என்று புன்முறுவலுடன் ஆக்ஞாபித்தார். திருமணமென்றவொரு பேச்சைக் கேட்டதும் மீனாக்ஷி வெட்கத்தால் தலை குனிந்தாள். பதிலொன்றும் பகரமாட்டாதவளாய் மதுரைக்குத்திரும்பிச்சென்றாள்.

விவாக விஷயம் நாடெங்கும்பரவியது.பிறநாட்டுப் பார்த்திபர்களுக்கும் திருமணப் பத்திரிகைஎட்டியது. தேவேந்திராதியர்க்கும் கலியாண சங்கதி கிட்டியது. ஐம்பத்தாறு தேசத்து அரசர்களனைவரும் மதுரைக்கு வந்து குழுமினர். அங்க வங்க கலிங்க காஷ்மீரக்காவலரும், நேபாள பூபாள பூபதிகளும், கொச்சி மலையாள குடக்குக் கோமகரும், சேர சோழ சிங்களச் சீமான்களும், காசி காஞ்சி அவந்திகா அரசர்களும், காமரூப காம்போஜ குந்தல குருக்ஷேத்திரக் கோமகர்களும், திரிகர்த்த திரிபுர திரவிட தனபாலர்களும், பாஞ்சால பாடலீபுத்திர பாரஸீகப் பார்த்திபர்களும், விதேஹ விருந்தாவன விராட மராட்டிய மாண்பினரும், ஸிந்து ஸௌராஷ்டிர ஹஸ்தினாபுரச் சக்கரவர்த்திகளும், மற்றுமுள்ள பல குறுநில மன்னரும் ஆலவாய் மதுராபுரி அழகியின் விவாக மகோற்சவத்திற்கு ஆர்வமுடன் விரைந்துவந்து விஜயஞ்செய்தனர். மண்ணரசர் மாத்திரமோ? விண்ணரசரில் தேவேந்திர னாதியாயுள்ள மற்றெல்லோரும் எழுந்தருளினார்கள். முற்றுந் துறந்த முனிவர்களும் முன்னிடந் தேடியடைந்தனர்.தும்புரு நாரத கின்னர கிம்புருஷ சித்த வித்தியாதர அப்ஸரஸ் கூட்டத்தாரும் திருமணப் பந்தலை அலங்கரித்தனர். கைலாஸ வாஸரும் தனது அதிபுஷ்டி ரிஷபத்தின் மீதுஇனிதமர்ந்து திரளான முனிகணங்கள்புடைசூழ மதுரைமாநகர்க்கு எழுந்தருளினார்.அவரவர்க்குத் தக்கபடி தலவசதி, ஜலவசதி, போஜன வசதிகளெல்லாம் எவ்விதமான குற்றங் குறைகளுமின்றி அளிக்கப்பட்டன.அந்நாள் மதுமைாநகரரெங்கும் ஓரே கூட்டமாய், வாத்திய கோஷ்டமாய், பாலர் பாலிகைகளின் ஆட்டமாய், வந்த அரசர்களுகெல்லாம் மீனாக்ஷியின் மேல் மனம் நாட்டமாய், பகரொணாப் பொலிவுடன், சொல்லவொணாச் சோபையுடன், வர்ணிக்க இயலாத வனப்புடன், விவரிக்க முடியாத விநோதத்துடன் விளங்கிற்று. களபகஸ்தூரி அகில்வாஸனைப் புகைகள் மேகமண்டலத்தைச் சூழ்ந்துகதுவின. செஞ்சந்தனக் குழம்புகள் தெருவில் சேறாய்க் குழைந்தன. பரிமளப் பன்னீர் பெருகி ஆறாயோடியது.குங்குமக் குழம்புகள் குழிகுழியாய்த் தேங்கின.

இவ்வைபவங்கள் இப்படியிருக்க நாமகளும் பூமகளும், மதுரைமகளுக்கு மங்களஸ்நானம் இனிது செய்வித்து, சந்தனம் அத்தர் புனுகு ஜவ்வாது முதலிய வாஸனாத்திரவியங்களைப் பூசி,சிறந்த ஆடை ஆபரணங்களைப் பூட்டி, கஸ்தூரி குங்குமத் திலகமிட்டு மணக்கோலஞ் செய்வித்தனர். சுமங்கலிக் கூட்டத்தார் ‘மின்னற் கொடியை நிகர்த்த மீனாக்ஷியைக் கலியாண மண்டபத்திற்கு அழைத்துவந்தார்கள். மாதர்கள் மங்கள கீதங்கள் பாட, வேதியர்கள் நான்கு வேதங்கள் ஓத, தும்புரு நாரதர்கள் வீணை வாசிக்க, மற்றும் பலவாத்தியங்கள் சேர்ந்து கோஷிக்க, சிவபெருமான் திருமங்கல்யத்தைத் தனது இரு திருக்கரங்களால் எடுத்துக் குறித்த நன்முகூர்த்தத்தில் மீனாக்ஷியினது கழுத்தில் அணிந்தார். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். மற்றுமுள்ளோர் ஆசி கூறினர். விவாகமகோற்சவம் வெகு விமரிசையாய் நிறைவேறியது. வந்திருந்த எல்லோர்க்கும் பன்னீர் தெளித்து, சந்தன தாம்பூல தேங்காய் பழவகைகளை வழங்கினார்கள்.

உடனே எல்லோரும்போஜனசாலைகளுக்குப்போனார்கள். அனைவரும் திருப்தியாகக் கணக்கற்ற கரியமுது வறுவல் பொரியல் வற்றல் வடாம் பக்ஷண பலஹாரங்களுடன் விருந்துண்டு சந்தனதாம்பூலம் பெற்றுச் சென்றனர். இன்னும் அமுதும் அதற்கேற்ற வஞ்சனங்களும் திரள்திரளாய் மிகுந்து கிடந்தன. பரிசாரகர்கள் மீனாக்ஷியிடம் வந்து, “அம்மணி! சமைத்த சாப்பாட்டில் கொஞ்சந்தான் செலவாயிற்று. திரளான வஸ்துக்கள் மிகுந்திருக்கின்றன. அவைகளை என்ன செய்வதென்று புரியவில்லை” என்று விண்ணப்பித்துக் கொண்டனர்.

உடனே மீனலோசனி தன் பர்த்தாவிடம் சென்று, “ஸ்வாமி! தேவரீர் தங்களுடைய பரிஜனங்களாகிய முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளுடன் எழுந்தருளுவீரென்று எதிர்பார்த்துச் சமையல்செய்யச் சொன்னேன். எல்லோரும் வரவில்லை போலிருக்கிறதே. அவ்வளவு சாப்பாடு மிகுதிபடக் காரணம்தெரியவில்லையே” என்று விசாரித்தாள். சிவபிரான் புன்னகை புரிந்து, தன்பக்கத்தில் நின்றுகொண்டு சாமரை வீசும் குண்டோதரனைப் பார்த்து, “ஹே குண்டோதரா! நீ இன்னும் சாப்பிடவில்லை போலிருக்கிறதே. ஐயோ பாவம்!! உன்னை இன்னும் யாரும் இங்குச் சிறிதும் கவனிக்கவில்லையா?போ போ எனக்குக் கைங்கரியம் புரிந்தது போதும். போய்,திருப்தியாய்ப் போஜனம் செய்துவிட்டு இவ்விடம்வா’ என்று கட்டளையிட்டார். அவனது வயிற்றில் அடங்காப் பெரும் பசியை யுண்டாக்கிவிட்டார்.

குண்டோதரன் மடைப்பள்ளியில் நுழைந்தான். குவியல் குவியலாய் அன்னத்தையும், கங்காளங் கங்காளமாய்க் குழம்பு வகைகளையும், கூடை கூடையாய்க் கரியமுது தினுசுகளையும், முறம் முறமாய் வறுவல் பொரியல்களையும், குடங் குடமாய்ப் பாயஸ விதங்களையும், அடுக்கு அடுக்காய்ப் பக்ஷண வகைகளையும், அண்டா அண்டாவாய்ப் பால் தயிர் நெய் மோர் வகைகளையும் வெகு வேகமாய் எடுத்தெடுத்துப் புசித்தான். கடைவாய்ப் பற்களுக்குக்கூடக் கிட்டவில்லை. அடுத் தாற் போலிருந்த உக்கிராண அறையில் நுழைந்தான். மூட்டைக் கணக்கான அரிசி பருப்பு ரவை வெல்லம் சர்க்கரை முதலானவைகளை வாரி வாரி யுண்டான். கூடைக் கணக்கான காய் கறிகளை விழுங்கினன். குலைக் கணக்கான வாழைப்பழங்களை உரித்து உட்செலுத்தினன். ஆயிரக் கணக்கான மா பலா ஆரஞ்சுப் பழங்களைப் புசித்தான். சமையற்காரர்கள் ஆச்சரியம் ஒரு பக்கம், பயம் ஒரு பக்கமுமாய்த் திகைத்து ஓடோடியும் சென்று மீனாக்ஷியிடம் முறையிட்டனர்.

அதற்குள் பரம்பொருள் மீனாக்ஷியைப்பார்த்து, பிரியே! "குண்டோதரன் சாப்பிட்டாய்விட்டதா? இன்னும் என்ன செய்கிறான்? மிஞ்சியிருப்பதை இன்னும் சாப்பிடாதிருக்கும் மற்றவர்களையும் விசாரித்துப் பரிமாறச் சொல்'' என்று சாவதானமாய்ச் சொன்னார். அதற்கு மீனாக்ஷி, "நாதா! இதென்ன விந்தையினும் விந்தையாயிருக்கிறதே. மடைப்பள்ளியிலும், உக்கிராணத்திலும் பருப்போடுபத்தும், உப்போடு முப்பதும் ஒன்று பாக்கியில்லாமல் குண்டோதரன் புசித்துவிட்டான். இன்னமும் அவனுக்குப் பசி அடங்கவில்லையாம்' என்று வியப்புடன் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே, குண்டோதரன் இரைக்க விரைக்க ஓடிவந்து, "ஸர்வேசா! இருந்த ஆகாரங்களையெல்லாம் சாப்பிட்டேன். கால்வயிறுகூட நிரம்பவில்லையே. என்ன செய்வேன்? என்னுடைய ஒருசாண் வயிற்றுக்குப் பசி தீர அன்னம் கிடைக்காத இதுதான் என்ன விருந்து?'' என்று பரிதாபகரமாய் முறையிட்டான். அதைக் கேட்ட எல்லாம் வல்ல இறைவன் அக்கணமே அவ்விடத்திலேயே நான்கு அன்னக்குழிகளை உண்டாக்கினர். அவைகளிலிருந்த திவ்யமான தயிரன்னம் அத்தனையும் இந்தக் குண்டோதரன் இனிது புசித்துப் பசிதீர்ந்தான். உடனே மீனாக்ஷிமணாளன் ஒரு பெரிய ஆற்றைச் சங்கற்பித்து, "அடே குண்டோதரா! உனக்கு தாகந் தணிவதென்றால் குடங்களில், கங்காளங்களில் நிரப்பிவைத்திருக்கும் தீர்த்தம் போதாது. இதோ இந்த ஆற்றில் கை வை. இஷ்டப்படிக் குடித்துத் தாகத்தைத் தணித்துக் கொள்'' என்று உத்தரவிட்டார். குண்டோதரன் தனது இருகரங்களாலும் வைகையாற்றைத் தடுத்து ஜலத்தைத் தேக்கித் தாகசாந்தியாகும் வரையில் குனிந்து பருகிக் களைதீர்ந்து மனங்குளிர்ந்தான். அவ்வளவில், ஆலால சுந்தரேசனது அற்புத திருவிளையாடலைக் கண்டு அனைவரும் வியந்தனர். புகழ்ந்து போற்றினர். சுந்தரேசரும் பாண்டியநாட்டை நீதிவழுவா நெறி முறையுடன் அரசுபுரிந்து, மீனாக்ஷியுடன் சந்தோஷமாய் வாழ்ந்து பக்தகோடிகள் உய்யும்வண்ணம் பல லீலைகளைப் புரிந்தார்.

# பொதிகை நிகண்டு

[771-வது பக்கத் தொடர்ச்சி]

அதிகமூ தியம்பயப்புப் பயம்பசை யிலாப
மாக்கநந்தல் பலித்தலுமாம் பழமைமுன் புராண
முதுமுறைதொன் றூழ்புரா தனம்பூர்ப்ப முந்தை
மூரிதொண்டு பண்டுதொல்லை யொல்லையூ ருவமாம்
புதுமைபுனை நூதனம்புத் தேள்விருந்து கோடி
புனிறுவம்பு கடியாணர் நவம்புதிது மாகுந்
திதிதிரமன் னுதருணு துஞ்சனிலை பேருந்
தேறுமன்ற நிச்செயந்தீர்க் கந்தரிப்பு நிசமே. 288.

நிசப்பிரிய மோகைமா ராயமுவ கையின்பேர்
நீங்காமை தண்டாமை யாளுமை யாகும்
*வசக்கிகுளை கேண்மைதுடர் கேள்நட்பு† மறுபேர்
மறுத்தல்வட்க லுட்கிலச்சை நாண்சமழ்த்தல் வெள்கல்
கசக்கம்வெட்க மாங்கேண்மை யுணர்வுகண்ணு கரிகங்
கண்ணோட்ட நயப்புமதாங் கணிதமெண்ண மாகு
மசத்திவிலக் கழுக்கின்மை யமலம்விம லமுமா
மதிகார முறைமைபா ரம்பரியத் திறமே. 289.

திறத்தினுடன் வகைகூறு பாடுவகுத் தலின்பேர்
திணைகுடியாம் பரியாய முறையாகு மாவே
வெறுப்பறுத்த லொல்லாமை மூனையவா வின்மை
வேண்டாமை யுவர்ப்புமாம் விரத்திசார் வறுத்தல்
துறத்தறுற வியின்பேரொற் றுமையொருமை குறிப்புத்
தொட்டிமையாஞ் செய்திசெய லியல்பொழுக்கா சார
நெறித்தன்மரி யாதமுறை கைநடைகி யாய
நீதிநெறி மஞ்சரிகை யறைசாரித் திரமே. 290.

சாரமொடு ‡சேறிரதந் தமிழமுதஞ் சுவைப்பேர்
தனியிலவம் புளிபுளிப்பாந் தித்தங்கைப் பாகுங்
காரமே கரில்கடுதெங் காயங்காழ்ப் பாகுங்
கனியினிதின் மதுரந்தீந் தெங்குதித்திப் பினிப்பாம்
பேர்பேரே யபிதான நாமமுமாந் துப்பு
பின்னேது §வாயில்கா ரணநிமித்தந் திறமே
வார்பொருட்டா மூரனுக்க முள்ளமிகு தியின்பேர்
வாழ்வியப்பற் புதமிறும்பூ ததிசெயம்விம் மிதமே. 291.

விம்மிதறை வேறலின்பேர் சபலமாந் துப்பு
விளைவுமல்லன் மங்கலம்போக் கியம்பொற்பு மலர்ச்சி
பொம்மல்பூப் பொலிவொன்பா னமைவுபுல்லல் கெழுமல்
பொருந்தலாம் வெகுவிதநா னுவிதம்பல் விதமா
மும்மையொழி பிறப்பம்மை மறுமைவரு பிறப்பா
மொழியிம்மை யிப்பிறப்பா மொருமையொரு பிறப்பா
மெம்மையெந்தப் பிறப்பாமேழ் பவமேழு பிறப்பா
மிழிதகவு பரிபவமா மெளிமையெண்மை யுரித்தே.

உரிமையின்பே ருரிபாங்கு கெழுக்காணி கிழமை
யுரித்தாட்சி தகைதாயம் பாலுடன்பத் தாகும்
விரைமுருகு கந்தமோ தவம்வம்பு நாற்றம்
வெறிகடியா மோதந்தேம் பரிமளங்கான் வசந்த
மருமதுவை நறைவாச மன்றலீ ரொன்பான்
மணமாகு நாறுதல்கந் தித்தல்கமழ் தலின்பே
ருருவருப்புத் துற்கந்தம் பூதியாம் பயிர்ப்போ
டருவருப்புக் குச்சிதமாந் தூவமன்னு மிழிபே. 293.

* வசத்திகுளை (பி-ம்) † நாற்பேர் (பி-ம்)

‡ சேறிரதமமுதமிவை (பி-ம்) § வாயில்சா (பி-ம்)

இழுக்குமறல் பொல்லாப்புப் பொல்லாங்கு மறவி [பேர்
யிகழ்ச்சிபுன்மை கீழ்ச்சோர்வொன் பானுமறத் தலின்
வழுக்குமாங் கரில்பழிபோக் கரில்பிழைதோங் காசு
வடுத்தவறு பொய்பழுது தப்புவசை யேத
மழுக்குமிறை குறையேச்சு கறைகோது நவையே
யாசுமறுப் புகர்களங்கந் துகள்கழிப்பு மாசு
கொழுப்பரிப்புச் செயிர்மானம் புரைமுப்பான் மூன்றுங்
குற்றமதாந் தளர்ச்சியின்பே ரேட்டையசாக் கொடியே.

கொடுமையின்பேர் பூதிகண்ட முறைப்புவஞ்சங் கோரங்
$கோடணையுக் கிரங்கலாங் கடிமைசடம் பத்துங்
கடினமுமாங் குறையிலம்பா டொற்கமின்மை மிச்சை
கலிவறுமை குறுவாழ்க்கை நிரப்பல்கல் சிறுமை
மிடியொடுநல் குரவீரா ரொன்றுதரித் திரப்பேர்
வெறுமையுமா மரிமுருட்டு தெவ்வுமுரண் பகையா
மடியுமதா முறவியுற வாமடம்பே தமையு
மருட்சியுமா மேதித்த வினைவிரக்கப் பயனே. 295.

பயமடுப்புத் தாருணநாங் கவலைவெறி வீமம்
பனிப்புப்பீர் வெறுப்புருமு வெருவுசூர் பிறப்பே
யயர்வுட்கு வெடிகோபம் பேம்புலம்பு விறைகொ
னச்சமதா கும்பிரமந் துரிதமிறை கவன
முயவழுங்கல் கவற்சிகதி யணங்காய்வு சமழ்த்த
லுயங்கலா குலமோவு கலக்கநொசி ம்ழுங்கல்
வயாவருத்தம் பதினெட்டா மடியிழிவு நந்தல்
வழுவுருங்கல் கயங்கேடு சுதங்கந்தல் சிதைவே. 296.

சிதம்புசித்தி சீரணஞ்சீத் தையுங்குணமின் மையின்பேர்
செடியுமதாம் விளம்பிதந்தா மதமாகுஞ் சண்டங்
கதங்குரூ ரங்கோப மறம்வெகுளி சீற்றங்
காய்வுளர் கலாம்புகைதல் விடைத்திடல் குரோத
¶முதும்பல்கறுப் புருத்தல்சிவப் பேபுழுங்கல் சீற
லுடற்றறீ விரமுணவல் கொதித்தல்கன்றல் கனறல்
வெதும்பல்பவ தொந்தமே சலம்வயிரம் வெம்பல் [மே.
வெறுத்தல்செயிர் மறமரிப்பெண் *ணலொன்றுஞ் சின

சினத்தபட ரின்னல்வெறுப் பிடும்பைபுன்கண் கேதஞ்
செல்லல்கோட் டாலையலக் கண்பீழை யரந்தை
பனித்தல்கவ்வை யாதனையின் னுங்குபையு ளேதம்
பருவரலிட் டளமுறுகண் மம்மரல்லல் கரந்தை
துனிப்பிடுக்கண் பீடையலம் வரலல்ல கண்டஞ்
சூர்விழுமங் கையாறு கவலைதுக்கம் பைத
லனுக்கநோய் நடலையெவ்வம் வெய்துறலே பழங்க
ணையெட்டுந் துன்பத்தி னபிதான விதமே. 298.

விதிர்ப்புலைவு தள்ளாடல் பொதிர்ப்பசைத்தல் பனிப்பு
விதலைகம்பங் கம்பிதஞ்சஞ் சலஞ்சவலந் துளங்க
லதிர்ப்புவிதர் குலைவுசலங் கலங்கல்நடுக் கமதா
மழுங்கலுமாந் தலையிழிவு சாய்வாகுந் தஞ்ச
மெதிர்த்தண்மை தாழ்வாகு மொழிவிழிவோ டேவர்ப்பே
†யெள்ளனகை நகலொல்ல னிந்தையின்பேர் குடில
மதிப்பிலிசாட் டியம்படிறு புள்ளுவங்குத் திரமே
மாயைகுய்யம் பட்டிமைகூ டமும்வஞ்ச மெனுமே 299.

என்னெவனெற் றுவோவை யோவக்கோ வந்தோ
வேயத்தா வன்னோவற் புதமுமிரக் கமதாங்
கொன்வறிது வீதாவீண் பயனிலிநாற் பேராங்
கோணன்மனக் கோட்டமுமவ் வியமுமழுக் காறும்

பின்னம்விப ரிதம்விகிர் தம் வேற்றுமை விரூபம்
பேதம்விள்ளல் விகண்டைவிக டிதம்வீற்று விகட
மன்னியமே திரிவுவிகற் பமும்வேறு பாடா
‡மகமொடுதி யானம்பா வகஞ்செடிபா வனையே. 300.

பாவம்பா தகம்பவந்தீ வினையாகு மொற்றை
பலனில்கே வலம்புலம்பு தனிமையே கமுமாஞ்
சோவமா ழாத்தலுண ராமைமத்த மிளமை
சோகமிருள் வெருண்மோக முன்மத்தம் பித்தந்
தாவம்பே தனந்தர்கள னேமமருண் மான்று
சழங்கரிமைந் தேபித்து மயர்கழுமு மாழ்க
ணேவுமறன் மயன்முயக்க மதாங்கைதூ வாமை
நொய்துறுங்கை யொழியாமை யாம்பெயர்மை விழியே.

மையன்மத னங்காமம் விரகமே மாசை
மால்வேண்டல் வேணவா மாதர்நசை நயப்பு
வெய்யபற்றி ராகஞ்சார் விவறல்பெட்பு வேட்கை
வெப்பநச்சா தரமிச்சை யேட்டைவயா நம்பு
கையிரதி பிணைவிழைவு மேவல்வெஃகல் விருப்பங்
காதலார் வங்கவற்றல் வீழ்தல்பெட்டன் மோக
மையிவர்த ரூழ்தலவா வாஞ்சைநாற் பதுபே
ராசையாங் கைக்கிளையோர் தலைக்காம மணங்கே 302.

அணங்குகுந்தம் பிணிமடியு ரோகநிழன் மாரி
யாமயஞ்சூர் மங்கல்பையுள் புன்கணுநோ யாகுந்
தணந்தசங்கை கடுத்தலையம் விப்பிரம்பி ராந்தி
சந்தேகங் கொல்லனுமா னமுமாகுந் தீங்கு
குணங்குமுட்டுப் பாடந்த ராயந்தீ தூறு
கோளேயந் தரந்துட்ட லாபமும்விக் கினமாம்
வணங்கழுங்கன் மடிவலச லாஞ்சிளொள்கல் சோப
மந்தமசை வாலசிய மாயாசஞ் சோம்பே. 303.

ஆயுமழி வின்மைகன்னி குமரிகோ ணையுமா
மடைக்கலப்பேர் கையடையாஞ் சாலூரங் கயவு
சாயலிவை மென்பாடாஞ் செயலறல்கை யறவாஞ்
*சமமிகல்கே ழாங்கன்ன போலென்ன வனைய
†எய்வுபடி நேர்கதழ்வு தூக்குவீழ் மான
மிணைதுணையற் றுறழொத்த னிகர்பொருவ கடுப்ப
‡தீயபுரை யுவமைமலை வொப்பிருபத் தாறுஞ்
சிச்சீயே லேயேயெ னிழியிகழ்ச்சி மரபே. 304.

மரபுநீர் பான்மைவண்மை கிழமைபெற்றி தகவு
மாலைபா லியல்புதன்மை தகுதிசந்தந் தகைமை
பரிசின்முறை சால்புவிதி கொள்கையதி காரம்
படிகுணமே நிறமிருபான் மூன்றுபண்பின் பேரா
மொருபலமே தொடிகஃசு காற்பலமா நிறையே
யொருதுலா மிடையரைத் துலாங்காற் றுலாமே
சொரிதூக்கா மொன்றேகம் பிரதமமொற் றையுமாஞ்
சுவடுகள முபையமிணை துணைதுவமு மிரண்டே. 305.

இரட்டொழிமூ முத்திரிமூன் றுஞ்சதுரும் பாத்து
மிசைநான்கு நாலாகும் பஞ்சமஞ்சு மைந்தா
மாற்றுசடஞ் சட்டாறுஞ் சத்தமே ழாகு [தாகுந்
மட்டமெட்டா நவந்தொண்டொன் பானுமொன்ப
தரத்தசம்பான் பதுபத்தா நூறுசத மாகுஞ்
சகத்திரமா யிரமயுத மேபத்தா யிரமா
மூரத்தநூ றாயிரமே யிலக்கமது பத்தே
யுறுநியுத மதுபத்தே கோடியெனுங் கூற்றே. 306.

$ கொட்டணையுக் (பி-ம்)

¶ முதம்பல் (பி-ம்)

* ணலிரண்டுஞ் (பி-ம்)

† யெள்ளலேநகல்வுல்க (பி-ம்)

‡ மகந்தியா னஞ்செடிபா வம்பாவ னையே (பி-ம்)

* சமமிகல் கேழாங்கெள்ள பாலென்னபடி நேர் (பி-ம்)

† ஏய்வனைய கதழ்வன்ன தூக்குவமைமான (பி - ம்)

‡ தீயபுரை துல்லியம் வீழ்மலைவியைவு மொப்பாம் (பி-ம்)

**ஏழாவது பண்புபற்றிய பெயர்த்தொகுதி முற்றும்.**

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[774-வது பக்கத் தொடர்ச்சி]

### 7. பிரவிருத்தி (Activity).

இது தர்மா தர்மசொரூபமாய், வாக்காதி கிரியைகளாய் நிகழ்வது. அவ்விரண்டிற்கும் அடியிற் கண்ட பாசுரத்தினின்று உதாரணம் காணலாம்.

அல்ல லாகவைம் பூதங்க ளாட்டினும்
வல்ல வாறுசி வாயந மவென்று
நல்ல மேவிய நாத னடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே

திருநல்லம்-திருக்குறுந்தொகை 6.

பிரவிருத்தி, பிராணிகளினது மனோவாக்குக்காயங்களின்கிரியைகளுக்கு ஏதுவாயிருத்தலால், அது உலக வியவகாரத்தின் காரணமாகும். பிரவிருத்தி மூன்று வகையாம். அவைபாவன: வாக்காரம்பம், புத்தியாரம்பம், சரீராரம்பம் என்பன.

வாக்காரம்பம், வசனித்தற் கனுகூலமாயது:-(உ-ம்)

வாக்கினு லின்பு ரைத்து
வாழ்கிலார் தம்மை யெல்லாம்
போக்கினுற் புடைத்த வர்க
ளுயிர்தனை யுண்டு மால்தான்
தேக்குநீர் செய்த கோயில்
திருவிரா மேச்சு ரத்தைத்
நோக்கினுல் வணங்கு வார்க்கு
நோய்வினை நுணுகு மன்றே.

திருவிராமேச்சுரம் - திருநேரிசை 6.

புத்தியாரம்பம், தியானம் முதலியவற்றிற்கு அநுகூலமாயது. (உ - ம்)

கருவாய்க் கிடந்துன் கழலே
நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன் றன் நாமம்
பயின்றே னுனதருளால்
திருவாய் பொலியச் சிவாய
நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா
திரிப்புலியூ ரரனே

திருப்பாதிரிப்புலியூர் - திருவிருத்தம் 6.

சரீராரம்பம், உடற்சேஷ்டைக்கு அநுகூலமாயது. (உ - ம்)

வன்கண்ண ர் வாளரக்கர்
வாழ்வினை யொன் றறியார்
புன்கண்ண ராகிநின் று
போர்கள்செய் தாரைமாட்டிச்
செங்கண்மால் செய்தகோயில்
திருவிரா மேச்சுரத்தைத்
தங்கணு லெய்தவல்லார்
தாழ்வராந் தலைவன்பாலே.

திருவிராமேச்சுரம் - திருநேரிசை 10.

### 8. தோடம்—குற்றம்.

தோஷங்கள், இராகம், துவேஷம், மோகமென்பன இவற்றைப்பற்றி முன்னரே சற்று கண்டோம். இராகம் என்பது இச்சை; துவேஷம் என்பது குரோதம்; மோகம் பொய்ம்மை யறிவு. தோஷங்கள் விருப்பாலும், வெறுப்பாலும், மயக்கத்தாலு முண்டாகும். சரீரத்தை ஆன்மாவென மயங்குதலும் மோகமாகும். மோகம் எழுவகை, விபர்யயம் சம்சயம் தருக்கம் * மானம் (தன்னிடத்தில்லாத குணங்களைக் கற்பித்துக் கொண்டு உயர்வாகக்கருதும் புத்தி) பிரமாதம் (அவசியம் செய்யத்தக்க காரியத்தைச் செய்யாமல் மறந்துவிடுதல்) † பயம் (அநிஷ்டம் செய்பவன் யாதாயினுமோர் காரணம் வாய்த்தகாலத்து அதனை விடுதற்குத் தகுதியின்மை யுணர்தல்) சோகம் (இஷ்ட வஸ்து பிரிந்தகாலத்து அது மீண்டும் கிடைத்தற் குரியதாகாமையை யுணர்தல்) என்னும் வேறு பாட்டால் ஏழு வகை.

### 9. பிரேத்தியபாவம் (Transmigration).

பிரேத்தியபாவம், ஜீவனுக்கு இறந்த பின்னர் உண்டாகும் பிறப்பு. அதாவது, ஆன்மாவானது பூர்வவுடம்பைவிட்டுப் புதிய உடப்போடு கூடுதல் ‡; கன்மவயத்தாற் சம்பவிக்கும் புதிய வுடம்பு பூர்வவுடம்பு நீங்குங்கால் அடுத்தவினைக்கு ஏற்றவாறு பெறுதலை, பின்வரும் அத்தியாயத்தில் விளக்குவோம். உயிரும் உடம்பும் ஒன்றுதலும் பிரிதலும், இரட்டலும், கெடுதலும், தோன்றலும் திரிதலும் இவையாவும் இறப்பும் பிறப்பும் என்னும் தன்மைகளிலே யடங்கும். அச் சுழலினின்று நீங்குவதற்கு இறைவன் திருவடியன்றி வேறுதுணையில்லை.

பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
இறப்பு நீக்கியிங் கின்பம்வந் தெய்திடும்
சிறப்பர் சேறையுட் செந்நெறி யான்கழல்
மறப்ப தின்றி மனத்தினுள் வைக்கவே.

திருச்சேறை - திருக்குறுந்தொகை 3.

பேர்த்தினிப் பிறவா வண்ணம் பிதற்றுமின் பேதைபங்
பார்த்தனுக் கருள்கள் செய்த பாசுபதன் திறமே [கன்

---

* தம்மானங் காப்ப தாகித் தையலார் வலையு ளாழ்ந்து
அம்மானை யமுதன் றன்னை யாதியை யந்த மாய [நின்ற
செம்மான வொளிகொள் மேனிச் சிந்தையு ளொன்றி
எம்மானை நினைய மாட்டே னென்செய்வான் றோன்றி
தனித் திருநேரிசை-1. னேனே.

† பயம்புன்மை சேர்தந்
பாவந் தவிர்ப்பன பார்ப்பதிதன்
குயம்பொன்மை மாமல
ராகக் குலாவின கூடவொண்ணுச்
சயம்புவென் றேதகு தாணுவென்
றேசதுர் வேதங்கள்நின்
றியம்புங் கழலின வின்னம்ப
ரான்ற னிணையடியே

திருவின்னம்பர் - திருவிருத்தம் 8.

‡ செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட் கேறுமோ
அத்த னென்றரி யோடு பிரமனும்
துத்தி யஞ்செய நின்றநற் சோதியே

ஆதிபுராணத் திருக்குறுந்தொகை 2.

ஆர்த்துவந் திழிவ தொத்த அலைபுனற் கங்கையேற்றுத்
தீர்த்தமாய்ப் போத விட்டார் திருச்சோற்றுத் துறை
யனாரே.

திருச்சோற்றுத்துறை - திருநேரிசை 6.

பிறவி மாயப் பிணக்கி லழுந்தினும்
உறவெ லாஞ் சிந்தித் துன்னி யுகவாதே
அறவ னெம்பிரா னன்பிலா லந்துறை
மறவா தேதொழு தேத்தி வணங்குமே.

திருவன்பிலாலந்துறை - திருக்குறுந்தொகை 7.

10. பலம்.

பலமாவது போகம். சுகதுக்கங்களின் அநுபவம். இது அலையலையாய் ஊழ்வினைக் கேற்ப உலகில் மாறி மாறியடிக்கும் ஒருவனது இன்ப துன்பங்கள். அவை வேண்டாமெனினும் வந்து நிற்கக்கூடியன. ஆயினும் அவை, அவா அல்லது பற்றுக்களிலிருந்து நீங்கினாரைப் பற்றா:—

தொண்டனேன் பிறந்து வாளா
தொல்வினைக் குழியில் வீழ்ந்து
பிண்டமே சுமந்து நாளும்
பெரியதோ ரவாவிற் பட்டேன்
அண்டனே யமரர் கோவே
அறிவனே யஞ்ச லென்னாய்
தெண்டிரைக் கங்கை சூடும்
திகழ்தரு சடையி னானே.

தனித்திருநேரிசை 6.

விள்ளத்தா னென்று மாட்டேன்
விருப்பெனும் வேட்கை யாலே
வள்ளத்தேன் போல நுன்னை
வாய்மடுத் துண்டி டாமே
உள்ளத்தே நிற்றி யேனும்
உயிர்ப்புளே வருதி யேனும்
கள்ளத்தே நிற்றி யம்மா
எங்ஙனங் காணு மாறே.

தனித்திருநேரிசை 7.

11. துக்கம் அல்லது பீடை.

இத்துன்பம் ஐந்துவகை (1) அவித்தை, அதாவது உண்மையின் அறிவிலாமை. (உ - ம்)

விளைவறி விலாமை யாலே வேதனைக் குழியி லாழ்ந்து
களைகணு மில்லே னெந்தாய் காமரங் கற்று மில்லேன்
தளையவிழ் கோதை நல்லார் தங்களோ டின்ப மெய்த
இளையனு மல்லே னெந்தாய் என்செய்வான் றோன்றி
னேனே

குறைந்த திருநேரிசை 6.

(ii) அஸ்மிதை அல்லது மோகம், (iii) இராகம் (iv) துவேஷம் (v) அபிநிவேசம், அல்லது மரண பயம்:—

பொருந்தாத வுடலகத்திற் புக்க ஆவி
போமா றறிந்தறிந்தே புலைவாழ் வுன்னி
இருந்தாங் கிடர்படனீ வேண்டா நெஞ்சே!"

திருநெய்த்தானம் - திருத்தாண்டகம் 9.

12. அபவர்க்கம்—மோக்ஷம்.

மோக்ஷமாவது இருபத்தொருவகைத் துக்கம்முழுதுங் கெடுதல் - இருபத்தொருவகை யென்று கூறப்பட்டன—உடம்பு, ஆறுஇந்திரியங்கள், ஆறுவிடயம், ஆறு ஞானம், சுகம், துக்கம்.

மோக்ஷமாகிய அபவர்க்கம் எங்ஙனம் உண்டாகுமெனில் "நூலாலறியப்பட்ட சகலபதார்த்தங்களின் * யதார்த்த சொரூப முடையவனாய், விடயக்குற்றங் காண்டலால் விரக்தியாய், † வீட்டின்ப வேட்கையுடையவனாய், தியானமுடையவனாய்த் தியானபரிபாக வசத்தாற் றோன்றின ஆன்மா வுடையவனாய், கிலேசகம் நீங்கினவனாய், ‡ நிட்காம கருமாநுட்டானத்தால் வருவதான புண்ணிய பாவங்களைச் சம்பாதிக்காதவனாய், முன்னடைந்த தர்மாதர்மக்கூட்டத்தை யோகப் பெருமையா லறிந்து ஒருமிக்க அநுபவிப்பவனுக்கு, முன்னர்க் கருமவிருததியின் நிகழ்கின்ற உடம்புநீக்கத்தில் வரும்உடம்பின்மையால், இருபத்தொரு துக்க சம்பந்தம் உண்டாகா." காரணம்—பிராந்தி ஞானமின்மையால்.

இருபத்தொரு துக்கக்கேடு மோக்கம். அது அபவர்க்கம் எனப்படும். இதைச் "சுழித்துணையாம் பிறவி வழி துக்கநீக்கும் நிலை" யென்றும் "பசுபாசப் பிறப்பை நீக்கும்" முடிவென்றும் ஆன்றோர் கூறுவார். இதனில் ஜீவனும் ஈச்வரனும் பேதமின்றிச் சுத்தமான அத்துவித நிலையில் நிற்கும். இத்தன்மையைத் திருநாவுக்கரசு நாயனார் பின்வருமாறு கூறிக் காட்டுவார்.

ஒருசுடரா யுலகேழு மானான் கண்டாய்
ஓங்காரத் துட்பொருளாய் நின்றான் கண்டாய்
விரிசுடராய் விளங்கொளியாய் நின்றான் கண்டாய்
விழவொலியும் வேள்வொலியு மானான் கண்டாய்
இருசுடர்மீ தோடா விலங்கைக் கோனை
யீடழிய விருபதுதோ ளிறுத்தான் கண்டாய்
மருசுடரின் மாணிக்கக் குன்று கண்டாய்
மழப்பாடி மன்னு மணாளன் றானே.

திருமழப்பாடி - திருத்தாண்டகம் 10.

இந்நிலையில்

வெம்பவரு கிற்பதன்று கூற்றம் நம்மேல்
வெய்யவினைப் பகையும் பைய நையும்
எம்பரிவு தீர்ந்தோ மிடுக்க ணில்லோம்
எங்கெழிலென் ஞாயிறெளியோ மல்லோம்
அம்பவளச் செஞ்சடைமே லாறு சூடி
அனலாடி ஆனஞ்சு மாட்டு கந்த
செம்பவள வண்ணர் செங்குன்ற வண்ணர்
செவ்வான வண்ணரென் சிந்தை யாரே.

தனித்திருத்தாண்டகம் 2.

உள்ளுமாய்ப் புறமுமாகி உருவுமா யருவுமாகி
வெள்ளமாய்க் கரையுமாகி விரிகதிர் ஞாயிறாகிக் [மாகி
கள்ளமாய்க் கள்ளத்துள்ளார் கருத்துமா யருத்த
அள்ளுவார்க் கள்ளல் செய்திட் டிருந்தவாப் பாடியாரே

திருவாப்பாடி - திருநேரிசை 7.

---

* முன்னை ஞான முதற்றனி வித்தினைப்
பின்னை ஞானப் பிறங்கு சடையனை
என்னை ஞானத் திருளறுத் தாண்டவன்
தன்னை ஞானத் தளையிட்டு வைப்பனே.

தனித்திருக்குறுந்தொகை 2.

† பொருளுஞ் சுற்றமும் பொய்ம்மையும் விட்டுநீர்
மருளு மாந்தரை மாற்றி மயக்கறுத்
தருளு மாவல்ல ஆதியா யென்றலும்
மருள றுத்திடும் வான்மியூ ரீசனே.

திருவான்மியூர் - திருக்குறுந்தொகை 2.

‡ பொறிப்பு லன்களைப் போக்கறுத் துள்ளத்தை
நெறிப்ப டுத்து நினைந்தவர் சிந்தையுள்
அறிப்பு றும்மமு தாயவ னேகம்பம்
குறிப்பி னிற்சென்று கூடித் தொழுதுமே.

திருவேகம்பம் - திருக்குறுந்தொகை 4.

(2-ம் பாகமாகிய பிரமேயம் முற்றிற்று)

# திருக்குறள் நீதி

## 2. இல்லறவியல்

[729-வது பக்கத் தொடர்ச்சி]

### 11. பிறனில் விழையாமை

1. பிறனில் விழையா ரறனு லாளர்.
2. பிறன்மனை புகுதல் அறன்கடை யாமே.
3. சிநேகனில் விழைவார் செத்தவ ராவர்.
4. காவிற் புணர்வார் சிறுமையோ சிறுமை.
5. இல்லிறந் தோர்பழி யிறவா திருக்கும்.
6. பழிபாவ மச்சம் பகைதானே மிச்சம்.
7. பிறனில் விழையா னில்லறங் காப்போன்.
8. பிறன்மனை விரும்பான் பேராண் டகையே.
9. பிறனிற் புகானே யறநெறி யாளன்.
10. பிறன்மனை விரும்பா னறம்பிற வேண்டான்.

### 12. பொறையுடைமை

1. பொறையிற் பெரியார் புவியிற் பெரியார்.
2. குற்ற மறக்குங் குணமே பொறுமை.
3. அறியாது செய்தெனக் குறியாமை பொறுமை.
4. நிறைவுடை யானைப் பொறையினு லறிக.
5. ஒறுத்தா ரறிவரோ பொறுத்தார் வெற்றி.
6. ஒறுத்தார் பெற்ற தொருநாளை யின்பம்.
7. தீங்குசெய் தாரைத் தாங்குதல் பொறுமை.
8. மிகுதி செய்தாரைத் தகுதியால் வெல்க.
9. தீயார் கொடுஞ்சொல் லாயார் பெரியோர்.
10. அவதூறு சொல்லில் தவநூறு கெடும்.

### 13. அழுக்காறாமை

1. அழுக்கா றிலாதவன் ஒழுக்கா றுடையோன்.
2. பொறாமையி லாமைபோற் பேறில்லை வேறு.
3. அறனுக்கம்வேண்டாதான்பிறனுக்கம்பேணுன்.
4. குற்ற மறிந்தவர் கொள்ளார் பொறாமை.
5. பொறாமை தானே பொல்லாப் பகைவன்.
6. கொடுப்பது தடுப்பவன் உடுப்பூ ணிழப்பன்.
7. அவ்விய நெஞ்சனைச் செய்யவள் சேராள்.
8. பாவி யழுக்காறு பாழ்நர குய்க்கும்.
9. செவ்வியான் கேடுமூன் அவ்விய மாகும்.
10. அழுக்கா றிலார்க் கழிவில்லை திண்ணம்.

### 14. வெஃகாமை

1. அனியாயத் தேட்ட மாபத்துக் காதாரம்.
2. நடுநிலை நின்றார் படுபயன் வெஃகார்.
3. தீப்பொருள் நயவார் மெய்யின்பம் தேடுமவர்
4. இலையென்றுவெஃகார்புலன்வென்ற பெரியோர்.
5. கற்றதெல்லா மூட முற்றதெல்லாம் வெஃகின்.
6. அருள்விழைந்தாற்றறம்பொருள்வெஃகக்கெட்டு
7. தட்டியுண் பார்க்குக் கிட்டாது மேன்மை.[விடும்.
8. வெஃகாமை யாற்றி னஃகாது செல்வம்.
9. அறனறிந்து வெஃகாரைத் திருவறிந்து சேரும்.
10. வேண்டாமை தானே தூண்டா விளக்கு.

### 15. புறங்கூறாமை

1. புறங்கூ றானுக் கறம்பிற வேண்டா.
2. காணுமற் பழிகூறி நாணுமல் நகையற்க.
3. புறங்கூறும் வாழ்வி லிறந்தானு நன்று.
4. நேர்நின்று தூற்று போகவிட் டாற்று.
5. அறங்கூறு வானைப் புறங்கூற்றி னறிந்திடுக.
6. தூற்றும் நண்பனைக் கூற்றெனத் தகுமே.
7. இதம்பேசி யுறவாடிப் புறங்கூறிப் பிரிப்பாரே.
8. பெற்றாளைத் தூற்றுவான் மற்றாரைத் தூற்றான்.
9. புறங்கூறுவானைப்பூவுறங்கூறிச்சுமக்கும்.[யான்
10. தன்குற்றந் தான்கண்டான் புறங்கூறிப் பழிசெய்

### 16. பயனில சொல்லாமை

1. எல்லாரு மெள்ளச் சொல்லற்க பயனில.
2. நயனிலாச் சொல்லை நண்பனு மேற்கான்.
3. பயனில துரைக்கி னயநில னென்க.
4. குணமிலா வாயன் துணையிலாத் தீயன்
5. பயனில் வாயன் மக்களிற் பதடி.
6. நயனில வாயினும் பயனுடை சொல்லுக.
7. ஆராய்ந்து கற்றார் தேராது சொல்லார்.
8. அருளாளர் பேசார் பொருளில்லா வார்த்தை.
9. மறந்தும் பயனில சிறந்தவர் சொல்லார்.
10. சொல்லிற் சொல்க பயனுடைச் சொல்லே.

### 17. தீவினை யச்சம்

1. தீவினை செய்யத் தீயோ ரஞ்சார்.
2. தீயினுங் கொடியது தீவினைச் செருக்கு.
3. மெய்யறி வுடையார் செய்யார் தீவினை.
4. பிறன்கேடு சூழி னறஞ்சூழுங் கேடு.
5. பொல்லாங்கு செய்து இல்லாமை தீராது.
6. தீப்பால செய்யின் நோய்ப்பால் வருந்துவன்.
7. தீவினைக் கொளிப்பது யாவற்கு மரிது.
8. தேவற்கு மரிது தீவினை நீக்கல்.
9. தன்னைத்தான் காக்கில் துன்னலன் தீவினை.
10. தீங்கில் லானைத் தாங்கு முலகு.

### 18. ஒப்புர வறிதல்

1. பெய்யும் மழைக்குக் கைம்மா றுளதோ.
2. ஒப்புர வென்பது ஒற்றுமை தேடல்.
3. நல்லார் தேட்டம் எல்லார்க்கும் பொதுவே.
4. ஒப்புர வாளனே உபகாரஞ் செய்பவன்.
5. ஒத்தறி நல்லா னுயிருடை மனிதன்.
6. பேரறி வாளன் ஊருணி போல்வான்.
7. நன்மரம் பழுத்தன்ன நல்லோர் செல்வம்.
8. மருந்து மலையே பெருந்தகைச் செல்வம்.
9. நல்லார் வறுமை யெல்லார்க்குந் துன்பம்.
10. ஒப்புர வுடையார்க் கொருநாளுங் குறைவில்லை.

### 19. ஈகை

1. வறியோர்க் கீவதே யீகையின் சிறப்பு.
2. இசையே யீகை யேற்ப திகழ்ச்சி.
3. இலமெனக் கரவார் குலநல மக்கள்.
4. ஈத லறியாற் கின்முக மில்லை.
5. பகுத்துண் பானைப் பசிநோ யணுகா.
6. அழிபசி யாற்றல் ஒழியாத் தேட்டம்.
7. இல்லையென் பான்மனை பல்லியுஞ் சேரா.
8. இட்டுண் டார்க்கு முட்டு வராது.
9. ஈயார் பொருளெலாந் தீயார் சொத்து.
10. கரந்தா னுணலி லிரந்தா ணினிது.

20. புகழ்
1. ஈத லின்றேல் சாதலே புகழாம்.
2. ஈவார் புகழே சாகா திருக்கும்.
3. பூதல மழியினும் புகழுடம் பழியாது.
4. புலவனும் பாடும் புகழுடை யானே.
5. புகழிலார் பிறப்பதிற் பிறவாமை நன்று.
6. தோன்றலிற் புகழிலார் தோன்றாமை நன்று.
7. புகழ்பெற வாழா ரிகழப் படுவார்.
8. இசையெச்ச மில்லாற்கு வசையெச்ச மாகும்.
9. இசைபட்ட வாழ்க்கை வசைபட்ட தில்லை.
10. வசைப்பட்டு வாழ்வதில் வாழாமை நன்று.

# ஜூலியஸ் ஸீஸர்

## [ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[776-வது பக்கத் தொடர்ச்சி]

### அங்கம் 5, களம் 1.

ப்ரூட்டஸ்.—ஸீஸர், நின்னுடன் கொணர்ந்திருந்தாலன்றி நீ சதியாளர் கைகளாற் சாகமாட்டாய். (1)

ஆக்டேவியஸ்:—ஓ! எனின், ப்ரூட்டஸின் வாளின் மீது மாய்வதற்கு யான் பிறந்திலேனென நம்புகின்றேன். (2).

ப்ரூட்டஸ்:—ஏ, இளைஞ! உன் மரபினிற் சிறந்த அண்ணல் நீ யாயினும், இதனினும் பெருமையோடு நீ மாய்த லியலாது. (3).

காஸ்ஸியஸ்:—கண்ணுளன் களிமகன் ஒருவனோடுற வுபூண்ட கடுத்தமுகத்திப் பள்ளிச்சிறுன் அத்தகைய பெருமைக்குத் தகுதிவாய்ந்திலன் (4).

ஆண்டனி:—பழைய காஸ்ஸியஸ்ஸேயோ இன்னமும் நீ!

ஆக்டேவியஸ்:—வா, ஆண்டனி; வந்திடு!—துரோகிகாள், அறைகூவும் எங்கள் வீரமொழிகளை உங்கள் முகத்தினில் வீசி எறிகின்றேம். இன்றைக்குப் போர்புரியத் துணிவீராயின் வெங்களம் வந்து சேருங்கள். இல்லையேல், வயிற்றிற்கு வேண்டிய போது வாருங்கள். (5)

[ஆக்டேவியஸும் ஆண்டனியும் அவர் சேனைகளுடன் போகின்றனர்]

காஸ்ஸியஸ்:—மெஸ்ஸாலா—

மெஸ்ஸாலா:—என் தலைவ, யாது இயம்புகின்றனை?

காஸ்ஸியஸ்:—மெஸ்ஸாலா, இற்றைத் தினமே காஸ்ஸியஸ் பிறந்தன னாதலின், இது என் பிறந்தநாள். உன் கையினைக் கொடு, மெஸ்ஸாலா (6). நம் வாழ்வத்தனையும் ஒருநாட் சமரில் வைப்பதற்கு, பாம்பேயைப்போல், நான் என் இஷ்டத்திற்குமாறாகவே வற்புறுத்தப் பெறுகின்றேன் என்பதற்கு நீ சாக்ஷியா யிருத்தல்வேண்டும். (7). எபிக்யூரஸையும் அவன் கொள்கையையும் யான் ஏற்றுக் கொண்டவ னல்லேனென்பது உனக்குத் தெரியும் (8). இப்பொழுது நான் மாறிய மனத்தனாகி, முன்னறிவிக்கும் நிமித்தங்களை ஒருவாறு நம்புகின்றவனாகின்றேன். ஸார்டிஸ்ஸிலிருந்து வரும்போது, வன்கழுகுகள் இரண்டு நம் பதாகையின் மீதிறங்கி, நம் படைஞர் கைகளினின்று உணவுகொண்டு விழுங்கினவாய் நம்முடன் இங்கு வழிக்கொண்டு வந்தன. இன்று காலையில் அவைகளோ பறந்து நீங்கிப்போய்விட, காகமும் பருந்தும் நம் தலைமீது வட்டமிட்டு வட்டமிட்டு, நோயுற்ற இரையேபோல் நம்மைக் கீழ்நோக்கிப் பார்க்கின்றன (9). அவைகளின் நிழல் விதிமாய்ந்த வோர் விதானம் போலவும், அதன் கீழ் நம்முடைய சேனை உயிர் விடுதற்கு ஆயத்தமாய்க் கிடப்பதுபோலவும் தோன்றுகின்றது. (10).

(1) "நானேனும் சதியாளர்களாகிய உங்களைக் கொன்று தீர்க்கவேண்டும், அல்லது நீங்களாவது என்னைக் கொன்று அழிக்கவேண்டும், அதுவரையில் உயர்த்திய இக்கத்தியைத் தாழ்த்தமாட்டேன்" என்று ஆக்டேவியஸ் ஸீஸர் கூறியதற்கு எதிர்மொழி இது. "உன்னைச்சேர்ந்தவர்களே உன்னைச் சதிக்கொலை செய்தாலன்றி நின்மொழி மெய்யாவதற்கில்லை. எங்களில் ஒருவரும் சதியாளர் அல்லர்"—என்பது பொருள்.

(2) சதியாளர்கைகளால் நான் சாகமாட்டேனாயின், நீ யொரு சதியாளனாதலின், உன் கையால் சாகமாட்டேன் என்பது நிச்சயமாகின்றது—என்பது பொருள்.

(3) இதனிலும்-என் கத்தியால் மாய்வதைக் காட்டிலும்-உனக்குப் பெருமை வேறில்லை—என்பது பொருள்.

(4) கண்ணுளன்-வேஷக் கூத்தாடி. களிமகன் குடிவெறி கொண்டு ஆடுபவன். ஆண்டனியை இச்சொற்களால் குறிக்கின்றான். பள்ளியிலிருந்து படிக்கவேண்டிய இளவயதுடையவன் ஆக்டேவியஸ் என்று இகழப்படுகின்றான். களியனோடு சேர்ந்த வொரு சிறுவன் ப்ரூட்டஸின் வாளால் மாள்கின்ற பெருமைக்குப் பாத்திரன் அல்லன்—என்பது பொருள்.

(5) வயிற்றிற்கு வேண்டிய போது—உங்களுக்கு இஷ்டம் உண்டாகும்போது வாருங்கள்—என்பது பொருள்.

(6) அன்பிற்கு அடையாளமாக அவன் கைகளைப் பற்றிக் கொள்கின்றான்.

(7) பிலிப்பைக்குத் தாம் போகாமல், சார்டிஸ்ஸிற்குப் பகைவர் சமர்கொண்டு வரும்வரையில் காத்திருப்பதே தகுதியென்று காஸ்ஸியஸ் கூறியதைக் கேளாமல் ப்ரூட்டஸ் இன்று போர்தொடுத்து வந்திருப்பதன் பொறுப்புத் தன்னுடையது அன்று என்பதைக் காஸ்ஸியஸ் மெஸ்ஸாலாவிற்கு எடுத்துச் சொல்கின்றான்.

(8) எபிக்யூரஸ், என்பவன் ஓர் கிரேக் தேயத்துத் தத்துவசாஸ்திரி; பின் வருவனவற்றைச் சகுனங்கள் முன்னறிவிக்கும் என்ற கொள்கையை யுடையவன். சகுனத்தில் முன் நம்பிக்கை வைத்திருந்ததில்லையாயினும் இப்பொழுது தான் நம்பிக்கையுடையவன் ஆவதாகக் கூறுகின்றான் காஸ்ஸியஸ்.

(9) வன் கழுகுகள் படைஞர் கையிலிருந்து உணவருந்தி வந்ததை, பகைவர் உடலைத் தமக்கு விருந்தூட்டும் வெற்றிக் கடையாளமாகவும், அவை நீங்கியதைத் தோல்விக்கு அறிகுறியாகவும், பிறகு, புன் காகமும் பருந்தும் தம் தலைமீது வட்டமிடுவது, தாங்களே அவைகளுக்கு இரையாக நிற்பதுபோலவும் காஸ்ஸியஸ் கருதுகின்றான்.

(10) விதானம்-மேற்கட்டு. விதிமாய்ந்த - இறந்தொழியும் விதியில் அகப்பட்ட.

(11) இதுவரையில், காஸ்ஸியஸ்ஸும் மெஸ்ஸாலாவும் ஒருபுறமாய்ப் பேசிக் கொண்டவை. இனி, லூஸிலியஸ்ஸும் ப்ரூட்டஸும் மற்றோர் புறத்தில் பேசிக்கொண்டிருப்பதை

மெஸ்ஸாலா:—அப்படி நீ நம்பவேண்டா.

காஸ்ஸியஸ்:—அதனை நான் முழுவதும் நம்ப வில்லை. உலவா ஊக்கமுடன், எவ்வகை விபத்தையும் சலியாமல் எதிர்ப்பதற்குத் துணிந்துளேன். (11).

ப்ரூட்டஸ்:—அப்படியுந்தான் லுஸிலியஸ். (12)

காஸ்ஸியஸ்:—பெருந்தகை ப்ரூட்டஸ், அமைதியின்பால் ஆசையுடைய நாம், நமது ஆயுளை முதுமைக்குச் செலுத்துமாறு தெய்வங்கள் இன்று துணை புரிய நிற்கின்றன (13). எனினும், மாநுட விவகாரங்கள் என்றும் நிச்சயத்தில் நிலைக்காதன வாதலின், கேடேதான் நேருமென்றே வைத்துக் கருதுவோம் (14). இப் போரினை நாம் இழப்போமாயின், நாமிருவரும் உரையாடுவது இதுவே கடைமுறை. அப்பொழுது நீ என்செய நிச்சயித்திருக்கின்றாய்?

ப்ரூட்டஸ்:—தனக்கோர் மரணம் தானேதந்துகொண்டதற்குக் கேடோவை நான் குறைகூறிய அத் தத்துவக் கொள்கையின்படியே (15)—ஏனென் றறியேன், மற்று, யாது விளையுமோவென்று அஞ்சி ஆயுள்காலத்தை இடைதடுத்தல், கோழை மனதுடைய கயமையேஎன நான் காண்கின்றேன் (16)—கீழிருக்கும் நம்மை ஆள்கின்ற மேலான சக்தியொன்றின் சித்தத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கப் பொறுமையெனும் கருவியினைக் கைக்கொள்வேன் (17).

காஸ்ஸியஸ்:—எனின், இப்போரினை இழப்போமாயின், உரோமின் தெருக்களூடு சிறைப்பட் டிழுத்துச்செல்ல நீ சம்மதித்திருக்கின்றாயோ?

ப்ரூட்டஸ்:—அல்லேன், காஸ்ஸியஸ், அல்லேன். பெருந்தகை உரோமனே, கட்டுண்டு ப்ரூட்டஸ் உரோமிற்கு என்றும் செல்வானென் றெண்ணற்க. அன்னதற் கமையாப் பெருமன முடையோனவன் (18). மற்று, மார்ச்சுமத்தி துவக்கிய கருமத்தை இற்றைநாள் முடிக்கவேண்டும். மறுபடி நாம் சந்திப்போமோ என்பதை யறியேன். ஆதலின், இறுதிவிடையினை நாம் இப்பொழுதே பெற்றுக் கொள்வோம். என்றும், என்றென்றும், விடை கொண்டீக காஸ்ஸியஸ். மறுபடி சந்திப்போமாயின், நன்று, நாம் நகைபாடுவோம். அன்றேல், மற்றென், இப்பிரிவு நன்றே புரியப்பெற்றது (19).

காஸ்ஸியஸ்:—என்றும், என்றென்றும், விடை தருக ப்ரூட்டஸ். மறுபடி சந்திப்போமாயின் முறுவல் கொள்வோம், உறுதியே; அன்றேல், இப்பிரிவு நன்றுபெற்ற துண்மையே.

ப்ரூட்டஸ்:—ஆயின், பின்னென், புறப்படு-ஓ இற்றைநாள் காரியத்தில் முடிவினை வருவதன்முன் ஒருவன் அறிவதற் காகாதோ! எனினும்,இந்நாள்முடியுமென்பதும் அப்பொழுது முடிவும் தெரியவரும் என்பதுவுமே சாலும். (20)-ஹோ! வாருங்கள், புறப்படுங்கள்.

ஷேக்ஸ்பியர் இடையே முடித்துவிடுகின்றார். காஸ்ஸியஸைப் போலவே, ப்ரூட்டஸும், வெற்றியோ தமக்கு வாய்க்காதெனும் அச்சமுடையவனு யிருக்கின்றான்.

(12) லுஸிலியஸ் சொல்லிய எதையோ வொன்றை ப்ரூட்டஸ் இவ்வண்ணம் ஒவ்வுகின்றான்.

(13) நாம் இன்று போரில் இறக்கமாட்டோம். அல்லலின்றி அமைதியுடன் அமர்ந்து வாழ்கின்ற முதுமைப் பருவத்தை நாம் எய்துதற்குத் தெய்வங்கள் நமக்குத் துணைபுரியும் என்பதில் சந்தேகமில்லை—என்பது பொருள்.

(14) எல்லாம் நலமே முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றதாயினும், மாநுடவாழ்க்கையில் ஒன்றையும் நிச்சயமாய்க் கொள்ள இயலாதாதலின், கேடு நேர்ந்துவிட்டால் நாம் என்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றியும் பேசிக் கொள்வது தக்கதே—என்பது பொருள்.

(15) கேடோ, என்பவன் போர்ஷியாவின் தந்தை. உரோமாபுரி அரசியல் வாதங்களில் தலைமைவகித்து எல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்றவன். எனினும், இவன் விரோதிகள் வலிவடையவே, அவர் தண்டனைக்கு அஞ்சித் தற்கொலை புரிந்துகொண்டான். இவ்வாறு, எக்காரணம் பற்றியும் தற்கொலை புரிந்துகொள்வது தக்கதன்றென்பது ப்ரூட்டஸின் கொள்கை. கேடோ செய்யத் தகாததைச் செய்தானென்று ப்ரூட்டஸ் அவன்மீது குறைகூறி யிருக்கின்றான்.

(16) ஏனென்றறி...காண்கின்றேன்—இடைப்பிறவரல். ஆயுள்காலத்தை இடைதடுத்தல்—ஆயுள் நிறையுமுன் தற்கொலை புரிந்துகொள்ளல்.

(17) போரினை யிழந்தாலும், கடவுள் இனி விட்டவழி விடட்டும் என்று பொறுமையுடன் இருப்பேனே யொழியத் தற்கொலை புரிந்துகொள்ளமாட்டேன்-என்பது பொருள்.

(18) பொருதவண்ணமாய்ப் போர்க்களத்தில் நான்வீழ்வேனே யல்லது, வேறில்லை. என் உயிர் இருக்கும் வரையில் வெற்றியுடன் என்னைச் சிறைப்பற்ற இடந்தரமாட்டேன்—என்பது பொருள்.

(19) வெற்றியுடன் மீள்வதில்லையேல் களத்தினில் வீழ்ந்து மாள்வதே கருமமெனத் துணிந்து செல்கின்றாராதலின், இருவரும் ஒருவர்பால் ஒருவர் விடை கொள்கின்றனர். "மறுபடி சந்தித்தால், வெற்றியை உவந்து நகுவோம். சந்திக்க நேராமல் மாள்வோமாயின்இதுவேஇறுதி விடையாகட்டும்— என்பது பொருள்.

(20) அன்றையதினம் புரியவிருக்கின்றபோரானது எவ்வாறு முடியுமோ என்று கவல்கின்றான் ப்ரூட்டஸ். முன்னரே அறிவதற்கு இயல்வதாகாதோ என்று அவாவுகின்றான். பிறகு, எல்லாம் அன்றைய மாலைக்குள் தெரிவது நிச்சயமாயிற்றே என்று எண்ணித் தேறுகின்றான்.

முதற்களம் முற்றிற்று.

அறிக்கை:—கலாநிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

# குடி வாழ்க்கை

**[Plato's Republic]**

இன்பமும் எல்லா நலங்களும் ஒருங்கே வாய்ந்து மக்களனைவரும் வாழுமாறு குடிமுறை அமைவதெங்ஙனமென, கிரேக்க வித்தகர் ஸாக்ரடீஸ் என்பவர்தம் முதற்சீடரும், அறிவினது எல்லையை எய்திநிற்பவரென்று கருதப்பெறுகின்ற வருமாகிய ப்ளேடோ என்பவர், நிரந்தரம் இவ்வுலகில் நிலைநிற்குமாறு வரைந்துள்ள நூலினைப் பயின்றறியாதார் ஒன்றும் அறியாதாரே. அவ்வரிய நூலினை முற்றிலும் தமிழில் மொழிபெயர்த்து ஆராய்தலென்பது அருமையினும் அருமை. ஆயினும் அப்பெரிய நூலில் என்னவென்ன செய்தி ஆராயப்பெற்றிருக்கின்றனவென்பதை மாத்திரம் ஒருவாறு தெரிந்துகொள்வதே மாந்தர்தம் சிந்தனையைத் தெளிவுசெய்து உண்மைநெறியின்பால் உய்ப்பதற்குப் போதிய உதவியாகும் என்பதில் ஐயமில்லை. ஆதலின், இங்கு, ப்ளேடோவின் முற்றிய முடிவுகளே பெரும்பாலும் எடுத்தியம்பப்படுமேயன்றி, அவர் அம்முடிவிற்கு வந்த காரணங்கள் ஆராயப்பெறமாட்டா:—

சாக்ரடீஸ் என்னும் வித்தகர் வாழ்க்கை முறையின் தத்துவத்தைப்பற்றி உற்ற நண்பர்களுடன் வார்த்தையாடும் முறையில் ப்ளேடோ தம் கருத்தை விளக்குகின்றார். ஒரு நாள் ஸிபாலஸ் என்னும் வயோதிக நண்பருடன் வார்த்தையாடிக் கொண்டிருக்கையில் அந்நண்பர் உடைமைகள், வாழ்க்கையில் சந்தோஷத்தை அளித்துவிடாவென்றும், நியாயமே வாழ்க்கையின் இலக்கணமென்றும், கூறினார். இதுகேட்ட சாக்ரடீஸ் நியாயம் என்பதைச் சிறிது விளக்குமாறு கேட்டார். அன்னதற்கு அவ்வயோதிகர் சைமொனடீஸ் என்னும் அறிஞர் கூறுவதுபோல், உண்மையைப் பேசுவதும், வாங்கின கடனைக் கொடுப்பதும் நியாயத்தின் விளக்கம் என்றார். பிறகு நியாயம் என்னப்படுவதன் விளக்கத்தைப்பெற மற்ற நண்பர்கள் முயல்கின்றனர்.

வாங்கின கடனைத் திருப்பிக்கொடுப்பது நியாயமாயின், நல்ல புத்தியோடு இருக்கும் ஒருவனிடமிருந்து கடனாகவாங்கிய ஒரு கத்தியை அவன் புத்தியின் ஸ்வாதீனமற்று இருக்கும் வேளையில் திருப்பிக் கொடுக்கலாமா? வாங்கின கடனைத் திருப்பிக்கொடுத்தலே நியாயமென்று கூறிய வித்தகர் சைமொனடீஸின் கருத்து இதுவாகத்தான் இருக்குமா? நட்பிலாதவர் கையில்இருக்கும்வாள் தீமை புரியுமல்லவா? எனவே, எது தீமையைத் தராதிருக்குமோ அவ்வழியில் நியாயத்தைச் செய்வது என்பது அவ்வித்தகர் கருத்தாயிருக்கலாம்; அதாவது நண்பனுக்கு நன்மையையும் விரோதிக்குக் கேட்டையும் செய்வது நியாயம் என்று பெறப்படுகின்றது. அப்படியானால் நன்மையையும் தீமையையும் நியாயம் எவ்வாறு புரிகின்றது? ஒருவரோடு உறவு கொண்டும்; வேறொருவரோடு பகைகொண்டும் நியாயம் பயில்கின்றது.

நியாயம் பயில்கின்ற முறை இதுவாயின், பகையொன்றுமில்லாமல் அமைதிநிலவும் காலத்தில் நியாயத்திற்கு இடமிலாது போகின்றதல்லவா? அமைதியான காலங்களில் பொருள் விஷயமான ஒப்பந்த ஏற்பாடுகள் செய்துகொள்வதற்கு நியாயம் உபயோகமாகும் என்று சொல்லலாம். இத்தகைய ஒப்பந்த ஏற்பாடுகளில் நியாயமானவன் எவ்வாறு மற்றவனைக் காட்டிலும் உபயோகமுள்ளவனாயிருக்கின்றான்? பொருளிற்கு நஷ்டமும் பயனும் இல்லாதிருக்கவேண்டிய பொழுது நியாயமானவன் உபயோகமானவனாயிருக்கின்றான். அதாவது பணம் உபயோகமற்றதாகும் காலையில் நியாயம் உபயோகமுள்ளதாகின்றது.

இன்னொரு கஷ்டமும் இருக்கின்றது. யுத்தக் கலையைப்போல் நியாயம், எதிர்க்கவும் தற்காத்துக் கொள்ளவும், திருடவும், தான் திருடப்படாது காத்துக்கொள்ளவும் துணைபுரிவதாகின்றது. எனவே இந்த முடிவினிற்கு சைமொனிடீஸின் நியாய விளக்கம் வந்து சேர்கின்றது. திருடுதலும், நண்பர்களின் நன்மைக்கும், விரோதிகளின் கேட்டிற்கும் புரியப்படுவது ஆகலாம் என்று கூறப்படலாம். அதை நான் மறக்கவில்லை. இது மற்றொரு கேள்வியைக் கொண்டுவருகின்றது.

நண்பருக்கு நன்மை, விரோதிகளுக்குத் தீமையென்றால், நண்பரையும் விரோதியையும் நாம் எவ்வாறு விளக்கிக்கொள்கின்றோம். நண்பர்களை உண்மையான நண்பர், நண்பர்போன்ற தோற்ற முடையவர் என்றும், விரோதிகளை உண்மையான விரோதி, விரோதி போன்ற தோற்றமுடையவர் என்றும் இரு இனத்தாரையும் பிரித்துக்கொள்ள வேண்டுமா? நண்பர்கள் உண்மையான நண்பர்களாகவும், விரோதிகள் உண்மையான விரோதிகளாகவும் தான் இருக்கவேண்டுமா? உண்மையான நண்பர்களோ அல்லது தோற்றமுடைய நண்பர்களோ யாரானாலும் நண்பர்களுக்கு நன்மையையும், உண்மையான விரோதிகளோ தோற்றமுடைய விரோதிகளோ யாவராயினும் விரோதிகளுக்குத் தீமையும் புரியவேண்டுமென்று விடை கூறுகின்றீர்களா? அதாவது நன்மைக்கு நன்மை, தீமைக்குத் தீமை, என்பது உங்கள் விடைபோலும்.

உங்கள் முடிவு அதுவாயின், தீமைக்குத் தீமைதான் புரியவேண்டுமோ. இப்படித் தீமைக்குத் தீமையேபுரிவது மனிதனைத் தீமையேயாகச் செய்யாதோ? எங்காவது நியாயம் அநியாயத்தைச் செய்யுமா? உஷ்ணம் தண்மையை உண்டாக்குமா? எந்த ஞானியும், எந்தக் கவிவாணனும் தீமைக்குத் தீமை புரிவது நியாயம் என்று கூறமாட்டான். உடல்உரமும், பணச்செருக்குமுடைய சிலர் வார்த்தையே இந்நியாய விளக்கம். நியாயம் தீமையை எவர்மாட்டும் புரியவல்லதன்று.

நியாயமானவனா அல்லது அநியாயக்காரனா சந்தோஷம் எய்துபவன் என்றவொரு வினாவிற்கு, "ஒவ்வொரு கலையும் ஒவ்வொரு தனிச்சிறப்பையுடையது. அத்தனிச்சிறப்பின் விகசிதமே அக்கலையின் முடிவினைக் காட்டுகின்றது. சந்தோஷந்தான் ஆன்மாவின் முடிவு. ஆன்மாவின் தனிச்சிறப்பான நியாயம் இறுதியில் சந்தோஷத்தைத் தருகின்றது. ஒரு மனிதன் ஒரு கருமத்தைச் செய்து முடிக்க ஆயுதங்கள் எப்படித் தேவையோ, அப்படியே சந்தோஷத்திற்கு நியா

யம் கருவியாய் அமைகின்றது" எனச் சாக்ரடீஸ் கருதுவதாக ப்ளேடோ வரைகின்றார்.

நன்மைகளை மூன்று விதமாகப் பாகுபாடு செய்யுலாம். தன்னளவிலேயே விரும்பப்படுகின்ற நன்மை ஒன்று. தன்னளவிலேயும் அதனால் ஏற்படும் முடிவினாலும் விரும்பப்படுகின்ற நன்மை இரண்டாவது. முடிவினால் மாத்திரம் விரும்பப்படும் நன்மைகள் மூன்றாவது. இம்மூன்றுவிதமான நன்மைகளில் நியாயம் இரண்டாவதினில் வைக்கப்படவேண்டும்.

ஒருவனுக்குத் தீமையைச் செய்வது செய்பவனுக்கு நன்மையைப் பயக்கலாம். துன்பத்திற் குள்ளாவது தீயது. தீமையைச் செய்வதால் ஏற்படும் நன்மையைக் காட்டிலும், தீமைக்குள்ளாவதால் ஏற்படும் துன்பம் மிகுதியானது என்று அனுபவத்தால் அறியலாக, துன்பத்திற் குள்ளாவார், பிறருக்குத் தீமை செய்யும் வன்மையற்றவரா யிருப்பதால், அவர்கள் ஒன்றுசேர்ந்து, நாம் தீமையும்செய்யவேண்டாம், தீமைக்கு ஆளாகவும் வேண்டாமென்று செய்து கொண்ட ஒப்பந்தம் இந்த நியாயம். இது முடிவினால் விரும்பப்படும் நன்மையாம். உண்மையில் நியாயம் தனனளவிலும் நன்மை பயக்கவேண்டும். அதன் முடிவும் யாருக்கும் தீமையைப் புரியலாகாது. இந்த நியாயமே சந்தோஷத்திற்கு வித்தாகும். மற்ற ஒப்பந்தத்தாலும், இலாப நோக்கத்தாலும் பிறக்கும் நியாயம், உண்மையான நியாயமன்று.

"சுபாவத்தினாலும், நிலையினாலும் வேறுபட்ட பலரைக் கொண்ட ஒரு அரசாங்க சமூகம் இனிது வாழவேண்டுமாயின் சட்டமும், திட்டமும், தண்டனையும் ஒன்றும் செய்திடாது. மனிதன் நல்லவனாயிருக்க வேண்டும். அப்பொழுது அரசாங்கமும் குடி வாழ்க்கையும் சிறப்புறுகின்றது." என்று கூறிப் பின் வருமாறு விளக்குகின்றார்:—


மனிதனுடைய தேவையிலிருந்துதான் சமூக அமைப்பு எழுகின்றது. மனிதனது முதல் தேவை உணவுப்பொருள். இரண்டாவது தேவை வசிப்பதற்குவீடு. உடை முதலியவைகள் மூனறாவது தேவை. இம் மூன்று தேவைகளும், இத்தேவைகள் பூர்த்தியாவதற்காக மனிதருக்குள் ஏற்படும் பண்டமாற்றும் மனிதனை நெருங்கச் செய்கின்றன. இதுதான் சமூகத்தின் ஆரம்பம். மனிதனுடைய தேவை கிடைக்கப் பெற விவசாயியும், வீடுகட்டுபவனும், துணி நெய்பவனும், அவசியமாகின்றனர். மனிதன் ஒவ்வொருவனும் வேறுபட்ட இயற்கையுடையவன். ஒரு கருமத்தில ஒருவன் மனம் நாடும். அக்கருமத்தை மற்றவர்களைக் காட்டிலும் அவன் நன்கு செய்வான். இயற்கைக்குத் தகுந்தவாறு வேலைப்பிரிவு ஏற்படுகின்றது. உழுது பயிரிடுவோன் வாங்குபவன் விற்பவன் கருவிகளை ஆக்குபவன் உபயோகிப்பவன் கால்நடை மேய்ப்பவன் என வேலைகள் பிரிவுபடுகின்றன. ஒரு சமூகம் இன்னபடியான வேலைப்பிரிவினால் பலரைச் சேர்த்துக் கொள்கின்றது. பிறகு வியாபாரம் வளர்கின்றது. இறக்குமதியும் ஏற்றுமதியும் செய்ய நேர்கின்றது. அயல் நாடுகளில் இறக்குமதி செய்ய அந் நாட்டு ஜனங்களின் விருப்பம் தேவைக் குரியபடி பொருள்கள் செய்யப்படவேண்டி வருகின்றது. இதனால் வியாபாரமும் கப்பல் வசதியும் வேண்டப் படுகின்றன. பிறகு வேலையாள்களின் தேவையும் உண்டாகின்றது. இத்தகைய வேறுபாடுடைய கருமங்களைச் செய்ய மனிதன் கூடுகின்ற காலையில், மனிதனுடை வேறுபாடுடைய இயற்கையினால் நியாயம் அநியாயம் என்னும் இவை வழங்க ஆரம்பிக்கின்றன. இதுதான் ஒரு குடி வாழ்க்கையின் ஆரம்பத் தோற்றம். மெல்ல மெல்லச் சுகம் என்னும் எண்ணம் பிறக்கின்றது. அன்னதற்கு ஆடையாபரணங்களும், நாற்காலி மேஜைகளும், சுவைதரும் உணவுகளும் வேண்டப் படுகின்றன. நடிகனும், சிற்பியும், பாடகனும், சமையற்காரனும், அம்பட்டனும், சேவகப் பெணகளும், வயித்தியனும் வேண்டியிருக்கின்றனர். இத்தனை விதமான தேவைகளைத் திருப்த்திசெய்து கொள்வதற்கு வேண்டிய உணவுப்பொருளும் வீட்டுவசதியும் மற்றசுகததிற்குரியவைகளும் பெருகுவதற்கு, ஒரு நாட்டார், அயல்நாட்டாருக்குச் சொந்தமான விடங்களில் படையெடுக்க வேண்டி வருகின்றது. அரசியல குழப்பத்திற்கும், யுத்தத்திற்கும் முதல் ஆரம்பம் ஆடம்பரத தேவைகளே.

இனி யுத்தமசெய்ய ராணுவநிலயமும், வீரர்களும் வேண்டாவோ? எல்லோருமயுத்தம்செய்யமுடியாது. யுத்தக்கலையும் ஒரு நாளில் கற்றுக்கொள்ளக் கூடியதன்று. இராணுவத்தொழிலுக்கு, சண்டை செய்யும் சுபாவமுடையவர்கள்தேவை. மோப்பத்தால்அறிந்து, விடாமல் தொடர்ந்து சென்று, போர் செய்யும் ஆற்றலுடைய நாய்களின் சுபாவமுடையவர் சிலர் எப்பொழுதும் இருப்பார்கள். இச்சுபாவமுடையவர்கள் ஒருவரையொருவர் கடித்து விழுங்கிக் கொள்ளவேதான் செய்வார்கள். நண்பர் என்றும், விரோதியென்றும் அச்சுபாவம் யாரையும் அறியாது. நண்பர்களினிடம் மிருதுவாகவும், விரோதியோடு கொடுமையாகவும் இருக்கும்படி இச்சுபாவமுடையவர்களைச் செய்வதற்து ஒரு காப்பாளன் தேவையல்லவா. அக்காப்பாளன்தான் அரசாங்கம். (தொடரும்)


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

ச்யாவனப்ராச
ஜீவஸுதா
பாதாமி லேகியம்
தந்வந்தரி லேகியம்



தைலங்கள்:

அமிர்தாமலக
பிருங்காமலக
ஸுகுமார
ஹிமஸாகர

"பாலஸுதா" குழந்தைகளுக்குச் சிறந்த டானிக் (ரூபா 1-0-0)
காஸ்ட்ராலக்ஸ்: சுத்தம் செய்து மூலிகை சேர்ந்த ஆமணக்கெண்ணெய் (6 அவுன்ஸ் 8 அணா)
ஸ்ப்ளீவரால்: குழந்தை கட்டிக்கும், ஜ்வரக் கட்டிக்கும் (ரூபா 2-0-0)
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை, (அணா 4) கோரோஜனை மாத்திரை, (அணா 6) பால சஞ்சீவினி (அணா 4)

ID L. ச்யாவனப்ராசா ID L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கேட (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ID L. G. மெடிகேடட்-டப்பி
(தபால் பில்லையுடன் லிஸ்டுக்கு எழுதவும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.)

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

## — பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

### தமிழகராதி ஆதார நூற்றொகுதி
### நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா **2-0-0**

### அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

### கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா **0-6-0**

---

### திருக்குறள்
**மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்**
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு **0-12-0**

### களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

---

### நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிகஇன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

---

### இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா **0-8-0**

---

### தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L., விலை அணு **0-6-0**

---

*கலா நிலயம் ஆபீஸ்,* வேளாளர் தெரு, புரசை, சென்னை.

# ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM C.C.S.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European Professor. S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

**PRICE Rs. 5-8-0.**

## *KALANILAYAM*

PURASAWALKAM :: VEPERY, MADRAS.

## ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

**செந்தமிழ்க்காதை.**

கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

## கலாநிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருததிற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E N தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம் பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை பெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

**களவியற் காரிகை:**—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐடர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. **7 8 0**
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. **8 8 0** ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. **9 0 0**

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். ஏஜெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

# வர்த்தமானம்

ஓர் ஆராய்ச்சி:—ஸ்ரீமான் எம். எஸ். இராமஸ்வாமி ஐயர் என்பார், நார்த்தையில் ஒன்றாகிய கடாரங்காய் எப்பொழுது எங்கிருந்து தென்னாட்டிற்கு வந்திருக்க வேண்டுமென்று ஆய்ந்து 'இந்து'ப் பத்திரிகையில் ஓர் கட்டுரை எழுதியிருக்கின்றார். அதில் கடாரங்காய், கடார நாட்டினில் உள்ள நார்த்தையென்றும், அக்கடாரத்திலிருந்து தென்னாட்டிற்கு கி. பி. 1013 க்கும் 1043க்கு இடையில் அது கொண்டுவரப்பட்டிருக்க வேண்டுமென்றும், அப்பொழுதுதான் கங்கை கொண்ட சோழன் என்னும் இராஜேந்திர சோழன் முதன்முதலாகக் கடாரத்தை வென்றான் என்றும், வரைந்துள்ளார். சில சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கடாரம் பர்மாவிலுள்ள ஓர் நாடு என்று கூறினர். ஆனால் சமீபத்தில் ஸ்ரீமான் C. F. ஆண்ட்ரூஸ் என்பவரோ சுமத்ராவிலுள்ள ஒரு தீவு கடாரம் என்று மாடர்ன் ரெவ்யூ பதிரிகையில் வரைந்தாராம். எனவே கடாரங்காய் சுமத்திராவிலுள்ள ஒரு தீவிலிருந்து வந்தது என்று முடிவாகக் கூறப்படுகின்றது. இது அண்டபுராணமன்று.

***

நீச்சுப்போட்டி:—கல்கத்தாவில் அக்டோபர் மாதம் 4-ந்தேதியன்று, 30 மைல் நீச்சுப்போட்டி நடந்தது. அப்போட்டியில் 11பேர் கலந்துகொண்டனராம். ஸ்ரீமான் சுதீர்கோஷ் என்னும் வங்காளி 5 மணி 17 நிமிஷத்தில்30 மைல் நீந்திவெற்றிபெற்றாராம். இரண்டாவதாக வந்தவர் 5மணி 20நிமிஷத்தில நீந்தினாராம். இப்போட்டியில் 12வயதுடைய ஓரிளைஞனும்சேர்ந்திருந்தானும். அவன் 30மைலும் நீந்தியது எல்லோர்க்கும் வியப்பைத் தந்ததாம்.

***

ஒருகோடி:—குடியரசுப் பேற்றையும் செல்வப்பெருக்கையும், கைத்தொழில் வர்த்தக வளத்தையும் கொண்ட அமெரிக்க ஐக்கிய நாட்டில் இப்பொழுது ஒரு கோடிப்பேர்கள் வேலையில்லாமல்திண்டாடுகின்றனர் என்று அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

விக்ரகக் களவு:—பூனாவுக் கருகிலுள்ள ஒரு பார்வதி கோயிலிலிருந்து 1240 தோலாநிறையுள்ளதங்கத்தாலான பார்வதி விக்ரகமும், 686 தோலா நிறையுள்ள விக்னேச்வரர் விக்ரகமும் களவாடப்பெற்றன வென்று தெரிகின்றது.

***

ஓர் அமெரிக்கநாட்டுச் சாது:-நீலகிரிக் கருகிலுள்ள குன்னூரில், தாழ்ந்த வகுப்பினருக்குச் சொந்தமான ஒரு விக்னேச்வரர் ஆலயத்தில் அமெரிக்க நாட்டாரான ஒரு சாது தங்கியிருக்கின்றார். அவர் படிப்பதிலும் தியானம் செய்வதிலும் தமது காலத்தைக் கழிக்கின்றாராம். அவரிடம் பணமில்லை. யாரிடமும் யாசிப்பதுமில்லை. யாராவது பழங்களை யளித்தால் வாங்கிப் புசிக்கின்றாராம். அவர் ஹிந்துமதத்தில் மிக்க பற்றுள்ளவர். தாம் ஹிந்து என்று கூறிக்கொள்கின்றாராம். அரசியல் விஷயங்களைப்பற்றி அவர் ஒன்றும் வாய் திறப்பதில்லையாம். சிறிதுகாலத்தில் அவர் இமயமலைச் சாரலை யடைவாராம். தமது இறுதிநாளை இந்தியாவில் கழிக்கவேண்டுமென்னும் எண்ணமுடையவராயிருக்கின்றாராம். தாம் அறிந்தவரை உலக மக்களில் இந்தியரே நல்லவர் என்று கூறுகின்றாராம்.

***

தனித் தபால்:—ஆமதாபாத்தில் ஒரு கனவான் அந்நகருக்குள் கடிதப் போக்குவரத்து செய்வதற்கு ஒரு பைசாக் கட்டணம் வைத்துத் தபால் போக்குவரத்து வசதிக்குரிய முயற்சி செய்தனராம். போலீசார் இதையறிந்து சமீபத்தில் அவர் வீட்டில் சோதனை செய்தன ரென்றும் அவரைக் கைதி செய்தனர் என்றும் தெரிகின்றது. தபால்இலாக்காச் சட்டப்படி அவர்மீது வழக்குத்தொடரப் பெறும் என்று தெரிகின்றது.

***

குழந்தைகளுக்கு 60 தெருக்கள் :—குழந்தைகள் விளையாடுவதற்கென்று மான்செஸ்டர் நகரச் சபையினர் 60 சிறு தெருக்களை ஒதுக்கிவைத்திருக்கின்றனராம். இத்தெருக்களில் வண்டிகள், மோட்டார்கள் போகக் கூடாதாம். காலை 8 மணியிலிருந்து இரவு 8 வணிவரையில் குழந்தைகள் பயமின்றி விளையாடலாமாம்.

***

ஏகாந்த வாழ்வு:-ஸ்காண்டிலிருந்து 100 மைலுக்கு அப்பால் உள்ள மின்கலே என்னும் தனித்தீவில் ரஸ்ஸல் என்னும் ஓர்ஸ்காட்லாந்திபர் தனிமையில் வாழ்கின்றார். அத்தீவின் அளவு ஒருசதுரமைல். அங்குத்தானே தாம் பயிர்செய்யும் பதார்த்தங்களை வைத்துக் கொண்டு வாழ்கின்றார். அவருக்குப் பணத்தேவையும், மனித உதவியும் கிடையா. அவர் எப்பொழுதும் படிப்பதும், பயிரிற்கு உரிய வேலைகளைச் செய்வது மாய்க் காலத்தைக் கழித்து வருகின்றார். உலக சமாசாரமே அவருக்குத் தெரியாது. அவர் அவைகளை அறிய விரும்புவதுமில்லை.

***

சேலவு:-மீரத்துச் சதிவழிக்கு விஷயமாய் 1932-ம் வருஷம் ஆகஸ்டு மாத இறுதிவரை இந்திய அரசாங்கத்திற்குச் செலவான ரூபாய் 1654000 என்று தெரிகின்றது.

***

பிராமணரல்லாதார் மஹாநாடு:—தஞ்சையில் அக்டோபர் 9-ந் தேதி கூடிய பிராமணரல்லாதார் மஹாநாடு குழப்பத்தில் முடிந்து கலைந்தது. இம்மஹாநாட்டில், கட்சித்தலைவரைத் தேர்ந்தெடுக்கும் விஷயமே சச்சரவில் முடித்துவைத்தது. ஸ்ரீமான் முனிசாமி நாயுடுவைத் தலைவர்பதவியினின்றும் நீக்கி, ஸ்ரீமான் பி. டி. ராஜனைத் தலைவராகச் செய்யவேண்டுமென்று ஒரு சாரார் முயன்றனர். மற்றொரு சாரார் ஸ்ரீமான் நாயுடுவின் பக்கமானவர். மத்தியஸ்தமான ஏற்பாட்டை பொட்டி, இவ்விருவருமல்லாது வேறு ஒருவரைத் தலைவராக நியமிக்க ஒருசாரார் முயன்றனர். ராஜா ஸர். அண்ணாமலை செட்டியாரை ஜஸ்டிஸ் கட்சியின் தலைவராக்குவதென்று சிலர் கூறினர். ராஜா அவர்கள் அப்பதவிஏற்க மறுத்துவிட்டார். கடைசியில் ஒருமுடிவும் ஏற்படாமல் கலகம் முதிரவே போலீசார் உதவிகொண்டு கூட்டம் கலையலாயிற்று.

***

புது முயற்சி:—இந்து முகமதிய சீக்கிய வகுப்பினர்க்குள் ஒரு மத்தியஸ்த ஏற்பாட்டைச்செய்து தனித்தொகுதி முறையில்லாமல் போவதற்கு ஒரு புது முயற்சி செய்யப்படுகின்றது. ஸ்ரீ மதன்மோஹன் மாளவியாவும் டாக்டர் அன்ஸாரியும், ஷெர்வானியும் முயன்று வருகின்றனர். இதுவரை, தனித்தொகுதியே வேண்டுமென்று வற்புறுத்திய மௌலானா ஷவுகட்டாலியும் மத்தியஸ்த முறைக்கு உடன்பட்டுத் தமது அமெரிக்கப் பிரயாணத்தைத் ஒத்திவைத்துள்ளார். சீக்கிரத்தில் ஒரு மத்தியஸ்த முறை ஏற்படுமென்று தெரிகின்றது. சீக்கிய வகுப்பினில் பெரும்பாலோர் தனித்தொகுதி முறையை எதிர்க்கின்றனர்.

KALANILAYAM
Reg. No. M. 2324.


# — கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

| | | | | |
|---|---|---|---|---|
| பால காண்டம் | ரூ. | 5 | 0 | 0 |
| அயோத்தியா காண்டம் | ,, | 5 | 0 | 0 |
| ஆரணிய காண்டம் | ,, | 4 | 0 | 0 |
| கிட்கிந்தா காண்டம் | ,, | 4 | 8 | 0 |
| சுந்தர காண்டம் | ,, | 5 | 0 | 0 |
| யுத்த காண்டம்—2 பாகம் | ,, | 10 | 0 | 0 |

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர்:— **கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.**

## :: அமிர்த சாகரம் ::

தேக பலத்தையும், ஞாபகவிருத்தியையும், பும்ஸத்வத்தையும், கொடுப்பதில் எங்கள்
அமிர்தார்ணவ லேகியம்
அமிர்தசாகரம் போன்றது. மேலும், நீடித்த தலைவலி, மண்டை இடி, மார்பு வலி, தேகச் சூடு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும். 20-தோலா லேகியம் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2.

இனாம்! ஆரோக்கிய கிரந்தம் இனாம்!
கேட்போருக்கு இனாமாகவும், தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கற்பக மலர் (சிறு கதைகள்)
(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)
மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணா 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணா 3.
ஏழணா ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர் B.A., L.T.,
இயற்றிய
: : இராமாயண வினா விடை : :

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு 380 பக்கங்கள் கொண்டது. ஏழு காண்டங்களும், அரிய நீதிகளும் தெளிவுவாய்ந்த அனுபந்தங்களும் அடங்கியது. விலை ரூபா 1 8 0

## NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

**Head Office :**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

| | |
|---|---|
| New Policies Issued in 1931 for over ... ... | Rs. 1,32,33,000 |
| Showing an increase over the New Business figure for 1930 of ... ... | 16.54 % |
| Claims paid up to end of 1931 over ... ... | Rs. 90,00,000 |
| Invested Funds amount to over | Rs. 1,75,00,000 |

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—
R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

**FIRE & ACCIDENT RISKS**
**covered by**
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)